# சோஷலிஸம்

ஜனவரி 1981 1

சோவியத் மாசிகை

## தத்துவமும் நடைமுறையும்

சர்வதேச பொருளாதார உறவுகளை புனரமைப்புச் செய்வதற்கான வாய்ப்புக்கள்

★

வளர்ச்சி குறைந்த சமுதாயங்களை நவீனமய மாக்கல்: ''சோவியத் பரிசோதனை''

★

ஏகாதிபத்தியமும் சோஷலிஸத்திசையமைவு நாடுகளும்

★

ஆபிரிக்காவில் முன்னணிக் கட்சிகளின் உருவாக்கம்

SITHY VINAYAGAR EAST WEST CHUNNAKAM LIBRARY

1 (61)
1981

S. Sritharan
Erlalai
west Chunnakam

# சோஷலிஸம்

98

## தத்துவமும் நடைமுறையும்

சோவியத் சித்தாந்த அரசியல் பத்திரிகைகளின் மாதாந்த மஞ்சரி

VINAYAGAR
ERLALAI WEST
CHUNNAKAM
KA/5
LIBRARY

நொவஸ்தி செய்தி ஸ்தாபனத் தயாரிப்பு

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய தூதரகத் தகவல் பிரிவின் தலைவர் இகோர் வி. ஷுலோவ் அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த றோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| இன்றைய விவகாரங்கள் | லியோனீட் பிரெஷ்னேவ்<br>எதிர்காலம்பற்றிய சிந்தனை | 03 |
| மகத்தான பாரம்பர்யம் | வி. ஐ. லெனின்<br>சமாதான ஆணை | 07 |
| மார்க்ஸியம்—லெனினியமும் எமது காலமும் | மார்க்கரிற்ரு மக்ஸிமோவா<br>சர்வதேச பொருளாதார உறவுகளை புனரமைப்புச் செய்வதற்கான வாய்ப்புக்கள் | 11 |
| வரலாறும் அனுபவமும் | புரட்சி தன்னைத்தானே தற்காத்துக் கொள்கிறது | 16 |
| | ஸொயா செர்டினு<br>வளர்ச்சி குறைந்த சமுதாயங்களை நவீனமயமாக்கல்: ''சோவியத் பரிசோதனை'' | 21 |
| சோவியத் சமுதாயம்: வாழ்வும் பிரச்னைகளும் | மிகைல் கொர்பாச்சேவ்<br>சோவியத் விவசாயம்: எய்தல்களும் பிரச்னைகளும் | 25 |
| சோஷலிஸமும் இன்றைய உலகும் | சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் சர்வதேசியம் | 29 |
| வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள் | நிக்கலாய் கொஸுகின்<br>ஆபிரிக்காவில் முன்னணிக் கட்சிகளின் உருவாக்கம் | 34 |
| | எல், கொர்னயேவ்<br>நியாயத்துக்காகப் போராடும் பலஸ்தீனம் | 39 |
| ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் | ஐ. புளாய்<br>அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆவல் | 42 |
| | அலக்ஸி இவா<br>ஏகாதிபத்தியமும் சோஷலிஸத் திசையமைவு நாடுகளும் | 46 |
| | ஐ. கிறிஷின்<br>பணவீக்கம், வருவாய்கள், வேலையில்லாத் திண்டாட்டம் | 51 |
| சித்தாந்த அரங்கு | கொன்ஸ்ரான்ரின் சேர்னென்கோ<br>சோ. க. கவின் சித்தாந்தம் மார்க்ஸிஸ-லெனினிஸமே | 58 |

லியோனித் பிரெஷ்னேவ்
சோ. க. க- மத்திய கமிட்டியின்
பொதுச் செயலாளர்,
சோ. சோ. கு. ஒ. சுப்றீம் சோவியத்
தலைமைக் குழு அக்கிராசனர்.

# எதிர்காலம் பற்றிய சிந்தனை

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றி எமது நாட்டையும், எமது மக்களையும் சமுதாய முற்போக்கின் முன்னணிக்குக் கொணர்ந்தது. வளர்ச்சியடைந்த சோஷலிஸ சமுதாயத்தை உலகில் முதன்முதலில் நிறுவியவர்களும், கம்யூனிஸத்தை உலகில் முதன்முதலில் நிர்மாணித்துவருபவர்களும் நாங்கள்தான்.

முன்னர் எப்பொழுதும் இல்லாதளவிற்கு மிகப்பெரிய பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப சக்தியினை எமது நாடு கொண்டுள்ளது. முன்னர் எப்பொழுதும் இல்லாத வகையில் எமது பாதுகாப்புத்திறன் மிக்க வலிமையுடனும், நம்பகமாகவும் இருக்கிறது, முன்னர் எப்பொழுதும் இல்லாத வகையில் மக்களுடைய நல்வாழ்க்கையினை உயர்த்தல், சோஷலிஸ ஜனநாயகத்தை விஸ்தரித்தல், தனிமனித வளர்ச்சியினை மேலும் மேம்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குச் சாதகமான சந்தர்ப்பங்களை நாம் கொண்டுள்ளோம். ''எமது இயற்கை வளம், எமது மனிதசக்தி' மாபெரும் புரட்சி எமது மக்களின் ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்குக் கொடுத்த உந்து சக்தி என்பன துரித முன்னேற்றத்தினை அடைவதற்கும், உண்மையான சக்திவாய்ந்த, வளம் கொளிக்கும் ரஷ்யாவை நிர்மாணிப்பதற்கும் போதியனவாக உள்ளன,'' என்று சோவியத் அதிகாரத்தின் உதயத்தின்போது லெனின் கூறினார். எமது பாரிய பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப சக்திகளுக்கும், புதியதோர் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதில் நாம் பெற்ற வள்மிக்க அனுபவங்

களுக்கும்கூட இது பொருந்தும். எமது இலக்காகிய கம்யூனிஸத்தை அடைவதற்கும், முன்னேற்றத்தின் புதிய சிகரங்களை எட்டுவதற்கும் தேவையான ஒவ்வொன்றையும் நாங்கள் கொண்டுள்ளோம்.

இவற்றை நோக்கி இட்டுச் செல்லும் பாதை செங்குத்தானதும், சிரமமானதுமாகும். இப்பாதையில் ஒரு கணிசமான வேகத்தில் செல்வதற்காக எதிர்காலச் செயற்பாடுகளைப் பூரணப்படுத்துவதற்கான இன்றைய நமது திட்டங்களை நாம் துரிதப்படுத்தவேண்டும். இதனைத்தான் எமது கட்சி இன்று செய்துகொண்டிருக்கிறது.

எமது பணிகள் இன்றைய தேவைப்பாடுகளை மட்டும் நோக்கியவையாக இருக்காது எதிர்காலத்தை நோக்கியதாகவும், அதிலும் குறிப்பாக எமது விவசாயக் கொள்கையை நோக்கியதாகவும் உள்ளது. உணவு விநியோகப் பிரச்னைக்குப் பூரண தீர்வுகாண்பதற்காகவும், நாட்டின் வளர்ந்து வரும் தேவைகளைத் திருப்திசெய்வதற்காகவும் நாங்கள் பணியாற்றிவருகிறோம். குடிமக்களும், அவர்களின் தேவைகளும் தொடர்ந்து அதிகரித்து வரும் அதேவேளையில் நிலப்பரப்பானது முன்னர் இருந்தது போன்றே இப்பொழும் இருக்கும் சூழ்நிலையில் நாங்கள் பணியாற்றவேண்டியவர்களாக உள்ளோம். இதனாற்தான் விவசாயத்தின் ஒவ்வொரு துறையினதும் துரித வளர்ச்சியும் எதிர்காலத்திற்காகத்திட்டமிடப்படுகிறது. இதனாற்தான் நாங்கள் விவசாயத்திற்காக பெருமளவு நிதியினை ஒதுக்கியுள்ளோம், தொடர்ந்து ஒதுக்கியும் வருகிறோம். அத்துடன் நாட்டுப் புறத்தின் தேவைகளுக்கு சேவையாற்றிவரும் கைத்தொழில்களையும் தொடர்ந்து விஸ்த்தரிக்கவுள்ளோம்.

ரஷ்யாவிலுள்ள கருமைநிறமற்ற நிலப்பிரதேசம் எமது திட்டங்களில் பிரதான பாத்திரமொன்றினை வகித்து வருகிறது. நாட்டின் நடுப்பகுதியில் அமைந்திருக்கும் இப்பரந்த பிரதேசம் பயிர்ச்செய்கைக்கும், பண்ணை வளர்ப்பிற்கும் ஏற்ற நிலப்பரப்பினைக் கொண்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்கூட எதிர்காலத்தினை நோக்கியதாகவே உள்ளன. மேற்கத்திய, கிழக்கத்திய சைபீரியாவினை அபிவிருத்திசெய்வது, பைக்கல்—அமுர் ரயிற் பாதையினை நிர்மாணிப்பது, சோவியத் தூரகிழக்கில் கைத்தொழில் நிறுவனங்களையும், மரம் பதனிடும் தொழிற்சாலைகளையும் நிறுவுதல் ஆகியவற்றிற்கான திட்டங்கள் இவற்றுள் முதன்மை பெறுகின்றன. எண்ணெய், வாயு, நிலக்கரி, இரும்பு,

இரும்பல்லாத உலோகங்கள், மரம், ஏனைய மூலப்பொருட்கள், என்பவற்றிற்கான நாட்டின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்முகமாக அவை வடிவமைக்கப் படுத்துவதில் பாரிய சமூக முக்கியத்துவமும் உள்ளது. இதன்பொருள் நாட்டின் பின்தங்கிய பிரதேசங்கள் பலவற்றை அபிவிருத்தி செய்வதாகும், அங்கு டசின் கணக்கான புதிய நகரங்களும், புதிய கலாச்சார நிலையங்களும் நிர்மாணிக்கப்படும். ''வளர்ச்சியுறாத வெளிப்பிரதேசங்கள்'' என்ற பதமே பூரணமாக இல்லாதொழிந்துவிடும்.

எதிர்காலத்தினைப்பற்றிச் சிந்திக்கும்போது நாம் விஞ்ஞானத்திற்கு பாரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கிறோம். பலவகையான இயற்கை வளங்களுக்குப் பதிலீடாக புதிய சக்திவளங்களைக் கண்டிபிடித்தல்; உடலுழைப்பை—அதிலும் விசேஷமாக கடினமான உடலுழைப்பை இயலுமான அளவில் குறைப்பதனை இலக்காகக் கொண்டு தொழில்நுட்பக் கருவிகளை அறிமுகப்படுத்துதல்; விவசாய உற்பத்தியினை உயர்த்துதல்; வியாதிகளை கூடியளவு இல்லாதொழித்து மனித வாழ்நாளை அதிகரிக்கச்செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய கம்யூனிஸ நிர்மாணத்தின் மிக முக்கிய செயற்பாடுகளை ஆற்றுவதில் இது பாரிய பங்களிப்பினை நல்கும்.

எதிர்காலத்தினை நோக்கும்போது நாம் இன்னொரு முடிவிற்கும் வரவேண்டியுள்ளது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், எமது சமுதாயத்தின் அபிவிருத்தியிலும் சோவியத் மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சி, கலாச்சாரம் சமுதாய பொறுப்புணர்வு என்பவற்றின் தரம் மேலும் பெருமளவில் உயர்ச்சியடையவேண்டும். எமது பிரஜைகளின் சித்தாந்தத் தெளிவு, பாரிய சமூக இலக்கு, பணியாற்றுவதில் உண்மையான ஆக்கபூர்வமான விருப்பு என்பவை எமது ஆரம்பச் செயற்பாடுகளாகும். கம்யூனிஸத்திற்கான போராட்டத்தில் இது மிகமுக்கியமானதொன்றாகும். இவற்றில் நாம் பெறும் வெற்றியிற்தான் நாட்டின் சமூக—பொருளாதார அபிவிருத்தி தங்கியுள்ளது.

நாம் எதிர்நோக்கவேண்டிய பல பிரச்னைகள் உண்டு, அவற்றுள் இவையே பாரிய பிரச்னைகளாகும். புதிய சமுதாய முறையானது இப்பிரச்னைகளுடன் மட்டும் நின்றுவிடாமல் இவற்றிற்கான தீர்வுகளுக்கேற்ற திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றும் தன்மையிலேயே சோஷலிஸத்தின் வலிமை தங்கியுள்ளது.

சோவியத் மக்கள் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்குகிறார்கள். வாழ்க்கை மேலும் அழகாகவும், அர்த்தமுள்ளதாகவும் சிறப்புறுமென்பதில் அவர்களுக்கு அதிக நம்பிக்கையுண்டு. கம்யூனிஸ சித்தாந்த வழிகாட்டலின்கீழ்

லட்சோப லட்சம் ஆண்களினதும், பெண்களினதும் பயன் கருதாப்பணியே இதனைச் சாத்தியப்படுத்தும், கம்யூனிஸ்ட் கட்சியினது விஞ்ஞானபூர்வமான லெனினிஸக் கொள்கை இதற்கு உதவும்,

உலகில் நிலைத்து நிற்கக்கூடிய சமுதாய வடிவம் சோஷலிஸமே என்று வரலாறு நிர்ணயிக்கக்கூடிய சகாப்தமொன்றினை நோக்கி நாம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம்... இதுவே உண்மையான சுபீட்சமாகும்.

எல். ஐ. பிரெஷ்னேவ்
''மாபெரும் அக்டோபர் புரட்சியும்
மனிதகுலத்தின் முன்னேற்றமும்''
மாஸ்கோ, பொலிறிஷ்தாட், 1977
என்ற நூலிலிருந்து ஒரு பகுதி'

வி. ஐ. லெனின்

# சமாதான ஆணை

ரஷ்யாவில் 1917 அக்டோபரில் நடந்த சோஷலிஸப் புரட்சிக்குப் பின்னர் தொழிலாளர் அரசு எடுத்த முதல் நடவடிக்கைகளுள் ஒன்று லெனினுல் கைச்சாத்திடப்பட்ட சமாதான ஆணையாகும். இந்த ஆவணத்தில் வரையறுக்கப்பட்ட அயல் நாட்டுக் கொள்கையை சோவியத் யூனியன் அதன் வரலாறு பூராவிலும் உறுதியாகக் கடைப்பிடித்துள்ளது.

அக்டோபர் 24-25ந் திகதிய புரட்சியில் உருவாக்கப்பட்ட தொழிலாளர்—விவசாயிகள் தொழிலாளர், போர்வீரர்கள், விவசாயிகளின் பிரதிநிதிகளின் சோவியத்துக்களை அடியாதாரமாகக் கொண்டு, போரிலீடுபட்டுள்ள அனைத்து மக்களையும் அவர்களின் அரசாங்கங்களையும் ஒரு நீதியான, ஜனநாயக சமாதானத்திற்காக உடனடியான பேச்சுவார்த்தைக்கு வருமாறு அறைகூவி அழைக்கிறது.

யுத்தத்தினுல் சளைத்துப் போன, சித்திரவதை செய்யப்பட்ட, சின்னு பின்னப்படுத்தப்பட்ட போரிலீடுபட்டுள்ள நாடுகளின் தொழிலாளர்களினதும், அனைத்து உழைக்கும் மக்களினதும் மிகப் பெருவாரியானவர்கள் அங்கலாய்த்து நிற்கும்—ஸாரிஸ்ட் சக்கிராதிபத்தியம் தூக்கியெறியப்பட்ட பின்னர் ரஷ்ய தொழிலாளர்களாலும் விவசாயிகளாலும் திட்டவட்டமாகவும் உறுதியுடனும் கோரப்படும் நீதியான, ஜநாயக சமாதானம் எனும் போது—எவ்வித அபகரிப்புகளுமற்ற (அந்நிய நிலங்கள் அபகரிக்கப்படாத, அந்நிய நாடுகள் பலவந்தமாக இணைக்கப்படாது, நஷ்ட ஈடுகள் அற்ற) உடனடியான சமாதானம் என்பதையே அரசாங்கம் கருதுகிறது.

இத்தகைய சமாதானத்தை யுத்தத்திலீடுபட்டுள்ள எல்லா நாடுகளும் உடனடியாகச் செய்து கொள்ளவேண்டும் என்று ரஷ்ய அரசாங்கம் ஆலோசனை கூறுகிறது, எத்தகைய தாமதமுமின்றி இப்போதே எல்லா உறுதியான நடவடிக்கைகளையும் எடுக்க அது தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறது. இத்தகைய சமாதானத்தின் நியதிகளை அனைத்து நாடுகளினதும் தேசங்களினதும் மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரபூர்வமான சபைகள் பின்னர் அங்கீகரிக்கலாம்.

பொதுவாக ஜனநாயகவாதிகளின், குறிப்பாக தொழிலாளி வர்க்கத்தின் நீதியின் பிரகாரம் அந்நிய நிலங்களை இணைப்பது அல்லது அபகரிப்பது எனும்போது ஒரு சிறிய அல்லது பலவீனமான தேசத்தை அந்தத் தேசத்தின் திட்டவட்டமான, தெளிவான, இஷ்டபூர்வமாகத் தெரிவிக்கப்படும் விருப்பமின்றி பெரிய அல்லது வலுமிக்க ராஜ்யத்தில் இணைப்பதையே அர்த்தப்படுகிறது என அரசாங்கம் கருதுகிறது. இந்தகைய பலவந்தமான இணைப்பு எப்போது நடைபெற்றது என்பதோ, ஒரு ராஜ்யத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்ட அல்லது அதன் எல்லைக்குள் பலவந்தமாக சேர்த்து வைக்கப்பட்டுள்ள நாட்டின் வளர்ச்சியின் அல்லது பின் தங்கிய நிலையின் அளவோ அல்லது இந்த நாடு ஐரோப்பாவிலா அல்லது தூரத்து கடல் கடந்த நாடுகளிலா இருக்கிறதுஎன்பதோ கவனத்திற் கொள்ளத் தேவையில்லை.

ஒரு குறிந்பிட்ட ராஜ்யத்தின் எல்லைகளுக்குள் எந்த ஒரு நாடாவது பலவந்தமாக வைத்திருக்கப்படுவது— பத்திரிகைகளிலோ, பொதுக் கூட்டங்களிலோ, கட்சிகளின் முடிவுகளிலோ, அல்லது தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்த ஆர்ப்பாட்டங்களிலோ வெகுஜன எழுச்சிகளிலோ தெரிவிக்கப்படும் விருப்பத்திற்கு மாருகவும், அல்லது இணைத்துள்ள அல்லது பலமிக்க நாட்டின் துருப்புக்கள் பரிபூரணமாக வாபஸ் பெறப்பட்ட பின்னரும், எவ்வித நிர்ப்பந்தமும் பிரயோகிக்கப்படாத நிலையில் ராஜ்ய வடிவம் பற்றி முடிவு செய்வதற்கான சுதந்திரமான வாக்குப் பதிவு இன்றியும் இணைக்கப்படுவது அபகரிப்பும் பலாத்காரமும் ஆகும்.

தாம் கைப்பற்றியுள்ள பலஹீனமான தேசங்களை பலமுள்ள, செல்வந்த நாடுகள் மத்தியில் எவ்வாறு பிரிப்பது என்ற பிரச்னை மீது இந்த யுத்தத்தை நீடிப்பது மனித குலத்தை எதிர்த்த கொடிய குற்றமாகும் என்று அரசாங்கம் கருதுவதுடன், எவ்வித விதிவிலக்குமின்றி எல்லாத்

தேசங்களுக்கும் சமமான நீதியினடிப்படையில் இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கான உடன்படிக்கையில் உடனடியாகவே கைச்சாத்திட தயாராக உள்ளது என்பதையும் பிரகடனப்படுத்துகிறது.

அதே நேரத்தில் மேலே குறிப்பிட்ட சமாதான நிபந்தனைகளை இறுதியானது என அரசாங்கம் கருதவில்லை என்பதையும் அது தெரிவித்துக் கொள்கிறது. வேறுவார்த்தையில் வேறெந்த சமாதான நிபந்தனைகளையும் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ள அது தயாராக உள்ளது. இவற்றை எந்த ஒரு நாடும் முன்வைக்கலாம், ஆனால் இவை விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் பரிபூரணமானதெளிவு இருக்கவேண்டும் என்றும் எந்தவிதமான ஐயப்பாடும்..., ஒளிவு மறைவும் இருக்கலாகாது என்றும் வலியுறுத்துகிறது.

அரசாங்கம் இரகசிய ராஜதந்திரத்தை ஒழிக்கிறது, அனைத்து மக்களின் முன்நிலையிலும் எல்லாப்பேச்சுவார்த்தைகளையும் வெளிப்படையாக நடத்த அது தயாராக இருக்கிறது என்பதை தெரியத்தருகிறது. 1917 பெப்ரவரி முதல் அக்டோபர் 25ஆந் திகதி வரை நிலப்பிரபுக்களினதும் முதலாளிகளினதும் அரசாங்கத்தால் செய்து கொள்ளப்பட்ட அனைத்து இரகசிய உடன்படிக்கைகளையும் முழுமையாகப் பகிரங்கப்படுத்த அது விரும்புகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறது. ரஷ்ய நிலப்பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் அனுகூலங்களை வழங்கியுள்ள, மாபெரும் ரஷ்யர்களின் இணைப்புகளை வைத்திருக்கவும் விஸ்தரிக்கவும் வகை செய்வதையே நோக்கமாகக் கொண்ட இந்த இரகசிய உடன்படிக்கைகளில் உள்ள அனைத்தும் நிபந்தனையின்றியும் உடனடியாகவும் ரத்துசெய்யப்படுகின்றன என்பதை அரசாங்கம் பிரகடனப் படுத்துகிறது.

யுத்தத்தை உடனடியாக நிறுத்துவது என போரிலீடுபட்டுள்ள அனைத்து நாடுகளின் அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் அரசாங்கம் ஆலோசனை கூறுகிறது. இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மூன்று மாதத்திற்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்குச் செய்து கொள்ளலாம் என அது கருதுகிறது, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்ட அனைத்து மக்களினதும் தேசங்களினதும் பிரதிநிதிகளுடன் எவ்வித விதிவிலக்குமின்றி பேச்சுவார்த்தைகளை நடத்தி முடிக்கவும், அனைத்து நாடுகளினதும் மக்களின் அதிகாரபூரவமான சபைகளைக் கூட்டி சமாதான நிபந்தனைகளை இறுதியாக அங்கீகரிக்கவும் இக்காலப் பகுதி போதுமானது என அது கருதுகிறது.

போரிலீடுபட்டுள்ள அனைத்து நாடுகளினதும் மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் இந்த சமாதான ஆலோசனைகளைச்

சமர்ப்பிக்கும் அதே வேளையில் ரஷ்ய தொழிலாளர்கள்—விவசாயிகளின் இடைக்கால அரசாங்கம் மனிதகுலத்தின் மிகவும் வளர்ச்சியுற்ற, தற்போதைய யுத்தத்தில் ஈடுபட்டுள்ள மூன்று நாடுகளான பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகியவற்றின் வர்க்க போதமடைந்த தொழிலாளர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறது. குறிப்பிட்ட நாடுகளின் தொழிலாளர்கள் யுத்தத்தின் கோரங்களிலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் மனிதகுலத்தை பாதுகாப்பதில் தமக்குள்ள பெரும் பொறுப்பை உணர்வார்கள் என்றும் நம்புகிறது....இந்தத் தொழிலாளர்கள் தமது முழுமையான, திடவுறுதியான, பெரு முனைப்பான நடவடிக்கைகள் மூலம் சமாதானத்தை வெற்றிகரமாக ஸ்திரப்படுத்தவும், அதே நேரத்தில் எமது ஜனத்தொகையில் உழைக்கும்—சுரண்டப்படும் மக்களையும் அனைத்து வடிவ அடிமைத் தனத்திலிருந்தும், அனைத்து வடிவ சுரண்டலிலிருந்தும் விடுவிக்கவும் எமக்கு உதவுவார்கள் என்றும் விசுவசிக்கிறோம்.

மார்கரிற்ரு மக்ஸிமோவா
விஞ்ஞான கலாநிதி (பொருளியல்)

# சர்வதேச பொருளாதார உறவுகளை புனரமைப்புச் செய்வதற்கான வாய்ப்புக்கள்

உலக அரசியலில் இணக்கவமைதி தலையாய போக்காக இருந்த 1970க்களில் சர்வதேச பொருளாதார உறவுகளைப் புனரமைப்புச் செய்வது மனிதகுலத்தை எதிர்நோக்கிய மிக முக்கியமான, காத்திரமான செயற்பாடாக இருந்தது. இக்காலகட்டத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளாலும், ராஜ்யத் தலைவர்களாலும் இப்பிரச்னை பரவலாக விவாதிக்கப்பட்டது. சர்வதேச பொருளாதார உறவுகளையும், நாடுகளின் வெளிநாட்டு பொருளாதாரக் கொள்கைகளையும் புனரமைப்புச் செய்வதற்கான திட்டங்களை உள்ளடக்கிய ஆவணங்கள் ஐக்கிய நாடுகள் சபையினாலும் ஏனைய சர்வதேச அமைப்புக்களினாலும் தயாரிக்கப்பட்டன.

சர்வதேச பொருளாதார உறவுகளை புனரமைப்புச் செய்வதற்கான பிரச்னை குறித்து மார்க்ஸிஸ்டுகளுக்கும், அவர்களின் எதிரிகளான பூர்ஷுவாக்களுக்கு மிடையில் தத்துவார்த்த, சித்தாந்த போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்கள் பல்வேறு சோஷலிஸ, முதலாளித்துவ, வளர்முக நாடுகளின் நடைமுறைக் கொள்கைகளிலும், சர்வதேச அமைப்புக்களின் செயற்பாடுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தின.

## வர்க்க நிலை

பண்டங்கள் குறித்த மார்க்ஸிஸ-லெனினிஸ விளக்கமானது; குறுகியதன்மை, வர்க்க விளக்கங்கள் என்பவற்றால் அடையாளம்காணத்தக்க பூர்ஷுவாக் கருத்துருவங்

களிலிருந்து அடிப்படையில் வேறுபடுகின்றது. சர்வதேச உறவுகளைப் புனரமைப்பது என்பது நாடுகளின் பொருளாதார உறவுகளை மட்டுமே உள்ளடக்கிய ஒருவகையான 'தன்னாட்சி' வடிவமென்றும் அது உலக அரசியல், சர்வதேச சூழ்நிலைகள் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களிலோ, உலகில் நிகழ்ந்து முடிந்த, தொடர்ந்து நிகழும் பிரதான சமுதாய மாற்றங்களிலோ தங்கியிருக்க வில்லையென்றும் பூர்ஷுவாக் கல்விமான்கள் கருதுகிறார்கள்.

இந்த வழிமுறை நீண்டகால வரலாற்றுப்போக்குடையதல்லவென்றும், இது குறுகிய வாழ்நாளைக் கொண்டதென்றும், இதற்கும் மேலாக, இது 1970க்களில் வலிந்து புகுத்தப்பட்ட ஒரு பிரசாரமென்றும் அதிகமான பூர்ஷுவாக் கல்விமான்களும், அரசியல்வாதிகளும் நிலைநிறுத்த முயன்றுவருகிறார்கள். அவர்களின் கருத்துப்படி, இப் பிரச்னை சர்வதேச உறவுகளில் புதியதோர் பொருளாதார அணியினை ஸ்தாபிக்கவேண்டுமென்ற வளர்முக நாடுகளின் கோரிக்கைக்கு எதிரான—அதனைச் சமன்படுத்துவதற்கான முதலாளித்துவ மேற்கின் நடவடிக்கையேயாகும்.

பூர்ஷுவா அணுகுமுறைக்கு முரணாக, மார்க்ஸிஸ—லெனினிஸ எண்ணக்கருவானது அதனுடைய சமூக, வர்க்க அர்த்தங்களினால் இனங்காணப்படுகிறது. சர்வதேச தொழிற்பகுப்பின் வளர்ச்சியின் பிரமாணம், பொருளாதார வாழ்க்கையினை சர்வதேசமயப்படுத்தல், வெளிநாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளின் வளர்ச்சி, உலகளாவிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாணல் என்பவற்றால் தீர்மானிக்கப்படும் பல விவகாரங்களில் மாற்றங்களின் அளவுகளும், போக்குகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

வேறுபட்ட சமூக அமைப்புகளைக்கொண்ட அரசுகள் இருக்கும்போது, முன்னைய கலோனியலிஸ, அரைக்கலோனியலிஸ நாடுகள் அரசியற் சுதந்திரத்தினை அடைந்துள்ளபோதிலும் அவை உலக முதலாளித்துவ பொருளாதாரத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கும்போது, சர்வதேச பொருளாதார உறவுகளின் குணாம்சங்களும், சாராம்சங்களும் மாற்றமுறும்போது எமது சகாப்தம் சிக்கல் நிறைந்ததாகத் தோன்றுவது இயற்கையானதே.

## சோஷலிஸ மார்க்கம்

சர்வதேச உறவுகளை சோஷலிஸ மார்க்கத்தில் புனர் நிர்மாணம் செய்வது மிகமுக்கியமானதோர் செயற்பாடாகும். முதலாளித்துவத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச பொருளாதார உறவுமுறைகளை உடைத்து, சுரண்டல், அடக்குமுறை, அசமத்துவம் என்பவற்றை இல்

லாதொழித்து புதியதோர், சோஷலிஸ வகையிலான தொழிற் பகுப்பினை, முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவு வதைவிட சிறந்த வகையிலான புதிய ஒத்துழைப்பு முறையினை நிர்மாணித்தல் இதற்கான முன்தேவையாக இருக்கிறது. இந்தப் பொறிமுறை தன்னிச்சையான போட்டி விதிகளுக்கமைவாகவோ ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டிவிதிகளுக்கமைவாகவோ செயற்படமாட்டாது, இது சோஷலிஸநாடுகளின் பரஸ்பரப் பொருளாதார உறவுகளின் திட்டமிடப்பட்ட நாடுகள் பாரிய சமுதாய, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தி, முதலாளித்துவ முறையினை இல்லாதொழிப்பது சோஷலிஸத்தை நோக்கிச் செல்லுமேயாயின் இவ்வாறான புரட்சிகரமான பொருளாதார மாற்றங்கள் சர்வதேச பொருளாதார உறவுகளில் ஏற்படுத்தல் சாத்தியமானதேயாகும்.

இவ்வாறான போக்கிற்கான முதற்பாதையை அமைத்துக் கொடுத்தது 1917ல் ரஷ்யாவில் நிகழ்வுற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியேயாகும். அன்றிலிருந்து உலக முதலாளித்துவ பொருளாதாரம் தனது ஏகபோகத் தன்மையை படிப்படியாக இழந்து வருகிறது. சர்வதேச அரங்கில் சோவியத் ரஷ்யா கடைப்பிடிக்க ஆரம்பித்த கொள்கை ஜாரிஸத்தினுல் நடைமுறைப் படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. சர்வதேச பொருளாதார உறவுகளில் உண்மையான சோஷலிஸ மாற்றங்கள் உலக சோஷலிஸ முறையின் உருவாக்கத்தினுலேயே சாத்தியமாயிற்று ஒவ்வொரு சோஷலிஸ நாட்டிலும் புதிய சமுதாய மொன்றின் நிர்மாணம் நாடுகளுக்கிடையிலான அவற்றின் பொருளாதார உறவுகளின் துரித புனர் நிர்மாணத்துடன் இணைந்ததாகவே காணப்படுகிறது.

## ஜனநாயக மார்க்கம்

சோஷலிஸ நாடுகள், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள், வளர்முக நாடுகள், சோஷலிஸ சார்புள்ள நாடுகள், முதலாளித்துவ சார்புள்ள நாடுகள் ஆகிய வேறுபட்ட அபிவிருத்தி மட்டங்களைக் கொண்ட, வேறுபட்ட சமூக, பொருளாதார முறைகள் நிலவும் நாடுகளினுல் சர்வதேச பொருளாதார உறவுகளின் புனரமைப்பின் ஜனநாயக மார்க்கம் கொண்டுவரப்பட்டது.

சர்வதேச பொருளாதார உறவுகளின் ஜனநாயகமயப்படுத்தலானது சர்வதேச முதலாளித்துவ தொழிற் பகுப்பின் அடித்தளத்தினை மாற்றுவதிலிருந்து தூரவிலகியும், உலக முதலாளித்துவச் சந்தையில் ஏகாதிபத்திய ஏகபோகச்

செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதனையும் அவற்றை ஒழுங்கு படுத்துவதனையும் சாத்தியப்படுத்தியும், சர்வதேச பொருளாதார உறவுகளில் ஜனநாயகக் கொள்கைகள் ஸ்தாபிக்கப்படுவதற்கான தேவையினை ஏகாதிபத்தியச் சக்திகள் அவதானிப்பதைக் குறைத்துமுள்ளது.

இது சோஷலிஸ நாடுகளாலும், வளர்முக நாடுகளிலுள்ள புரட்சிகர, முற்போக்குச் சக்திகளினாலும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள உழைக்கும் வர்க்கத்தினராலும், ஜனநாயக இயக்கத்தினாலும் நிலையான அமைதிக்கான உறுதிப்பாடு, இறைமைக்கு மதிப்பளித்தல், நேர்மையான, சமத்துவமான, பரஸ்பர லாபந்தரும் சர்வதேச ஒத்துழைப்பு, நியோ—கலோனியலிஸத்தையும், கலோனியலிஸ எச்சசொச்சங்களையும் ஒழித்தல், தேசிய, சர்வதேச ஏகபோகங்களின் ஆதிக்கத்தினைக் குறைத்தல், ஏகாதிபத்தியச் சர்வாதிகாரப்போக்குகள் யாவற்றிற்கும் முடிவுகட்டல் ஆகிய பல்வேறு கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதை முன்தேவையாகக் கொண்டுள்ளது.

உலக கம்யூனிஸ, பாட்டாளி வர்க்க இயக்கங்கள் சர்வதேச பொருளாதார உறவுகளின் ஜனநாயக மயப்படுத்தலை ஏகாதிபத்தியத்திலிருந்தும், நியோ—கலோனியலிஸத்திலிருந்தும் விடுபட்ட ஒரு சர்வதேச சமுதாயத்தினை, முழுமையான சுதந்திரம், மனிதகுலத்தின் உலகளாவிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் அவற்றின் செயன் முனைப்பான பங்களிப்பு ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்ததோர் சமூகத்தினை நிர்மாணிப்பதற்கான போராட்டத்தில் மிக முக்கியமானதோர் நிலைபாடாகக் கருதுகின்றன. சர்வதேச பொருளாதார உறவுகளின் பரந்த ஜனநாயகமயப்படுத்தல் சமாதானம், பந்தோபஸ்த்து என்பவற்றை வலுப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்யும்போது முற்போக்கான மாற்றங்கள் ஏற்படுவதைச் சாத்தியப்படுத்துவதுடன் உலகப் பிரச்னைகளைச் சாதகமாகத் தீர்த்துவைப்பதற்கும் உதவுகிறது.

## ஒரு சிக்கலான வழிமுறை

சர்வதேச பொருளாதார உறவுகளை சோஷலிஸ மார்க்கத்தில் புனர்நிர்மாணஞ் செய்தல் ஆகிய இரு வழிமுறைகளுமே வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு கட்டங்களில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத் தன்மையைப் பெறுகின்றன. புரட்சிகர எழுச்சிகள், ஒருநாடோ அல்லது ஒன்றிற்குமேற்பட்ட நாடுகளோ சர்வதேச சோஷலிஸ தொழிற் பகுப்பிற்குச் சாதகமாக உலக முதலாளித்துவ பொருளாதார முறையிலிருந்து உடைந்து செல்லுதல்

ஆகியவற்றின் விளைவுகளின் போது இது சிக்கலான சூழ்நிலையொன்றினைத் தோற்றுவிப்பதுடன் குறிப்பாகக் கூர்மையடையவும் செய்கிறது. உலக சோஷலிஸ முறையினுல் புதிய பல நாடுகள் ஈர்க்கப்படும்போது அந்நாடுகளைத் தொடர்ந்து தமது செலவாக்கின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கு உலக ஏகபோக முதலாளித்துவமும், ஏகாதிபத்தியச் சக்திகளும் தம்மாலான அத்தனை எதிர்ப்பு முயற்சிகளையும் செய்கின்றன.

ஒரே வார்த்தையிற் கூறுவதானுல் சர்வதேச அரசியல் இணக்கவமைதியினைப் போன்றே, சர்வதேச பொருளாதார உறவுகளின் ஜனநாயக மயப்படுத்தலும் எமது சகாப்தத்தின் தனித்துவ அம்சங்களைப் பிரதிபலிக்கும் ஏற்றங்களையும் இறக்கங்களையும் கொண்டதாயுள்ளது.

மிரோவாயா எக்கனோமிக்கா ஐ
மெஷ்துநரோட்னீ ஒட்னோஷெனியா
இல. 8, 1980

வரலாறும் அனுபவமும்

# புரட்சி தன்னைத்தானே தற்காத்துக் கொள்கிறது

''தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளமுடியாத எந்தப் ஒரு புரட்சியும் எவ்விதப் பெறுமதியும் அற்றதாகும்'' 1 என்று சோவியத் ராஜ்யத்தினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் நிறுவகரானலெனின் கூறினர். இந்தத் தற்காப்பை புரட்சிகர ராணுவம் உத்தரவாதப்படுத்துகிறது,

சோவியத் நாட்டில் தொழிலாளர் விவசாயிகள் ராணுவத்தின் தோற்றத்தையும் கோட்பாடுகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.

அனைத்து நாடுகளுடனும் சமாதானமாக வாழ விரும்புவதாக சோவியத் குடியரசு தனது முதலாவது ஆக்ஞையில் பிரகடனப்படுத்திய போதிலும் அது அதன் முதல் மூன்று ஆண்டுகளிலும் (1918-1920) புரட்சியின் ஆதாயங்களைப் பாதுகாக்க உள்நாட்டு, வெளிநாட்டுச் சத்துராதிகளை எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது.

இந்நிலைமைகளில் சோஷலிஸத் தாயகத்தின் தற்காப்பை ஒட்டிய நடைமுறைப் பிரச்னைக்கு சோவியத் ராஜ்யமும் கம்யூனிஸ்ட் கட்சியும் முகம் கொடுத்தன.

அந்த இடர்மிகு ஆண்டுகளில் இச்சிக்கலான பிரச்னைக்குச் சரியான தீர்வு காணப்பட்டது என்பதை சோவியத் நாட்டின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. மாபெரும் அஜாத சக்தியைத் தன்னகத்தே கொண்டிருந்தது என்பதை எதார்த்தத்தில் வெளிப்படுத்தியது.

---

1 வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், பா. 28. பக். 123

# அனைத்தும் யுத்த முனைக்காக, அனைத்தும் சத்துராதியின் மீதான வெற்றிக்காக

அக்டோபர் புரட்சி வெற்றியீட்டிய உடனேயே ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து நாட்டை வாபஸ்பெற சோவியத் அரசு நடவடிக்கை எடுத்தது. ஒரு நீதியான, ஜனநாயக சமாதானத்திற்கான உடன்படிக்கையைச் செய்து கொள்வது என அது ஆலோசனை தெரிவித்தது.

ஜேர்மனியுடனுன யுத்தத்தை சோவியத் ராஜ்யத்தால் தொடர்ந்து நடத்த முடியாது என லெனின் கூறினுர். பழைய ராணுவம் சின்னுபின்னமாகிவிட்டது. புதிய ராணுவம் உருவாக்கப்பட்டுவிடவில்லை. மக்கள் சலிப்புற்றிருந்தனர். இந்நிலைமைகளில் யுத்தத்தைத் தொடர்வது சோவியத் ஆட்சிக்கு அழிவையே கொண்டுவரும்.

''புரட்சிகர யுத்தம்'' என்ற சுலோகவாதிகளை அம்பலப்படுத்திய லெனின் புரட்சியையும் சோவியத் ஆட்சியையும் பாதுகாப்பதற்கான ஒரே பாதை யுத்தத்தைத் தொடர்வதல்ல, மாருக சமாதான ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதாகும் என்று லெனின் வலியுறுத்தினுர். ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் சமரசம் செய்வதற்கும், உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்குமான சாத்தியப்பாடுகளையும் அவசியத்தையும் அவர் குறிப்பிட்டார். லெனினது அணுகுமுறை முற்று முழுக்கச் சரியானது என்பதை வரலாறு ருஜூபித்து விட்டது. ஜேர்மனியுடனுன யுத்த நிறுத்தமும், பின்னர் 1918 மார்ச்சில் செய்து கொள்ளப்பட்ட பிரெஸ்ட் சமாதான உடன்படிக்கையும் கடினமானதாக இருந்த போதிலும் இது தன்னை வலுப்படுத்திக் கொள்ளவும் தனது தற்காப்புச் சக்தியை வலுப்படுத்தவுமான கால அவகாசத்தை வழங்கியது.

இந்தக் காலப்பகுதியில் நாட்டின் தற்காப்புச் சக்தியைக் கட்டி எழுப்பவும், தொழிலாளர்—விவசாயிகள் செஞ்சேனையை மிக மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கவும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பொருளாதாரச் சீர்குலைவு, யுத்தத்தின் விளைவாக மக்கள் மத்தியில் ஏற்பட்ட விரக்தி, புரட்சிக்கு விசுவாசமான ஆளணிப் பற்றுக்குறை ஆகிய கஷ்டமான பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

இப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண உழைக்கும் மக்களின் மிகச் சிறந்த சக்திகளை கம்யூனிஸ்ட் கட்சி திரட்டியது. ''அனைதும் போர்முனைக்காக, அனைத்தும் சத்துராதி மீது வெற்றியீட்டுவதற்காக'' என்ற கட்சியின் சுலோகம் போராட்ட அறைகூவலாகியது.

நாட்டின் தற்காப்பை லெனினே வழி நடத்திச் சென்றார். அவரது வழிகாட்டலின் கீழே செஞ்சேனை உருவாக்கப்பட்டது. தொழிலாளர்—விவசாயிகள் செஞ்சேனையையும், தொழிலாளர்—விவசாயிகள் செங்கடற்படையையும் அமைக்கும் ஆணைகள் 1918 ஜனவரியில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றைத் தயாரிப்பதில் லெனின் நேரடியாகப் பங்கெடுத்தார்.

## இஷ்டபூர்வமான தொண்டர் படையிலிருந்து நிரந்தர ராணுவம்

முதலில் சோவியத் ராணுவம் இஷ்டபூர்வமான தொண்டர் படை எனும் வடிவிலேயே அமைக்கப்பட்டது. 1918 மேயில் 300 ஆயிரம் ஆடவர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். என்றாலும் இஷ்டபூர்வமான தொண்டர் படைகளால் மட்டும் நீண்டதொரு போரை மேற்கொள்ளமுடியாது என்பது தெளிவாகியது. மிகச் சிறந்த முறையில் ஆயுத பாணியாக்கப்பட்ட, மிகச் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்ட எதிர்ப்புரட்சியாளர்களினதும் ஏகாதிபத்திய வல்லரசுகளினதும் 700 ஆயிரம் வீரர்களைக் கொண்ட ஆயுதப் படைகளை எதிர்த்து செஞ்சேனை போரிட வேண்டியிருந்தது.

பெரியளவிலான ஆயுதப் போராட்டம் சேஞ்சேனையை துரிதகதியில் வலுப்படுத்துவதை அவசியமாக்கியது. தொழிலாளர்கள் மத்தியில் கட்டாய ராணுவ சேவை முறை புகுத்தப்பட்டது. செஞ்சேனை நிரந்தர ராணுவமாக்கப் பட்டது.

சொல்லொணுக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் தீவிரமான அரசியல் பணி மூலம் செஞ்சேனையின் வலுவை விஸ்தரிக்கும் பெரும் பணியை கட்சியும் அரசும் திறம்படச் செய்து முடித்தன. உதாரணத்திற்கு 1918 ஆகஸ்ட் 15 ஆந் திகதி அளவில் செஞ்சேனை 400 ஆயிரம் வீரர்களைத் தனது அணியில் திரட்டியிருந்தது. 1920 ஆம் ஆண்டு இறுதியில் இவ் எண்ணிக்கை 55 லட்சம் வீரர்கள் சோவியத் குடியரசின் ஆயுதப் படைகள்—தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றை-உள்ளடக்கியிருந்தனர்.

நாட்டின் தற்காப்பு அமைப்பினை ஒழுங்கமைத்த லெனினும் கட்சி மத்தியக் கமிட்டியும் நாட்டை ஒரே ராணுவ முகாமாக மற்றும் திட்டத்தைத் தயாரித்துச் செயல் படுத்தினர். இத்திட்டம் நாட்டின் தற்காப்பினை மத்தியத்துவப்படுத்துவதையும், ஆயுதப் படைகளினதும்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

கட்சி—அரசியல் பணிகளினதும் ஐக்கியத்தைவும் உத்தர வாதப்படுத்தியது. கட்சி, அரசாங்க, வெகுஜன ஸ்தாப னங்கள் ராணுவ முறையில் புனர் அமைக்கப்பட்டன. கட்சி "போராட்ட" கட்சியாக மாற்றப்பட்டது. பெரு மளவில் கம்யூனிஸ்ட்டுகள் போர் முனைப் பணியில் ஈடுபடுத் தப்பட்டனர். போர்முனையும் பின் புலமும் இடையறுது இணைக்கப்பட்டன. போர்முனைக்கு ஆயுதங்களும், பொருட் களும் உணவும் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது. அனைத்து சோவியத் குடியரசுகளின தும் மக்களும் போர் முனைப்பணிகளுக்குத் திரட்டப்பட் டனர். உலகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒருமைப்பாடு ஒன்று திரட்டப்பட்டது. எதிரியின் பின்புலத்தில் தலைமறை வுப் போராட்ட இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

உழைக்கும் மக்களின் மிகப்பரவலான பகுதியினரை நாட்டின் தற்காப்புப் பணிகளில் ஈடுபடச் செய்வதற்காக 18க்கும் 40க்கும் இடைப்பட்ட அனைத்து ஆடவர்களுக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்கும் ஆணை 1918 ஏப்ரலில் பிறப்பிக்கப்பட்டது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் வர்க்க நிலைபாடு முன்வைக்கப்பட்டது. தொழிலாளர்களை யும் விவசாயிகளையும் மட்டுமே ராணுவப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்வதென அனைத்து ரஷ்ய மத்திய செயற் குழு தெரிவித்தது. இந்த பொது ராணுவப் பயிற்சியே மாபெரும் செஞ்சேனையினது உருவாக்கத்தினது தொடக் கமாக அமைந்தது.

செஞ்சேனை மக்களின் சமத்துவம், நட்புறவு என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. ஒடுக்குமுறையினதும் சுரண்டலினதும் எல்லா வடிவங்களை யும் எதிர்க்கும் ஒரு சேனையாக இது தோற்றம் பெற்றது. இதனுல் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் இதை ஆதரித்ததுடன் இதன் அணியில் திரண்டனர். செக்நாட்டவர், ஹங்கேரியர்கள், ஸ்லோவாக்கியர்கள் உட்பட மற்றும் பல தேசத்தவர்களும் இதில் சேர்ந்தனர். உலகப் பிற்போக்கினதும் ஏகாதிபத்தியத்தினதும் ஆயுதப் படைகளை எதிர்த்து இவர்கள் சோவியத் மக்களுடன் தோளோடு தோள் சேர்ந்து போரிட்டனர்.

## தலைமை ஆளணிகள்

செஞ்சேனையின் உருவாக்கம் அதற்கான தலைமை ஆளணிகளை அளிக்கும் பிரச்னையை முன்வைத்தது.

செஞ்சேனை இஷ்டபூர்வமான தொண்டர் படையாக அமைக்கப்பட்டபோது ராணுவத் தலைவர்கள் நியமிக்கப் படவில்லை, மாறுக வீரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கட்சி ராணுவ ஊழியர்களும், அதேபோல புரட்சியை ஆதரித்த ஸார் ராணுவத்திலிருந்த வீரர்களும் அதிகாரி களும் உயர் பொறுப்புகளுக்கு உயர்த்தப்பட்டனர். ஸாரி

ஸ்ட் ராணுவத்தினது நிபுணர்கள், அதிகாரிகள், ஜெனரல்கள் ஆகியோரின் ஆதரவும் திரட்டப்பட்டது. ''எமது சேவைகளில் நாம் இவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பின், இவர்களை எமக்குப் பணிபுரியச் செய்யாதிருந்திருப்பின் எம்மால் ஒரு ராணுவத்தை உருவாக்கி இருக்க முடியாது''2 என்று லெனின் எழுதினர்.

ராணுவ கமிஸார் நிலையத்தின் பணிகளுக்கு லெனினும் கட்சி மத்தியக் கமிட்டியும் பெரும் முக்கியத்துவம் அளித்தனர். இதில் உயர்மட்ட புரட்சிகர ராணுவ கவுன்சில் முதல் ராணுவத்திலிருந்த கீழ்மட்ட கட்சி—அரச அமைப்புகள் வரை பிரதிநித்துவப்படுத்தப்பட்டன. முன்னுள் ராணுவ நிபுணர்கள் மீது கட்டுப்பாட்டைப் பேணுவதும் புரட்சிகர ஒழுங்கை நிலைநிறுத்துவதும் வீரர்கள், அதிகாரிகள் மத்தியில் அரசியல்—கல்விப் பணியை மேற்கொள்வதும் இதன் பணியாகும். ''ராணுவ கமிஸார்கள் இன்றி நாம் செஞ்சேனையை உருவாக்கி இருக்கமுடியாது''3 என்று லெனின் எழுதினர்.

1918 இறுதியில் அமைக்கப்பட்ட செஞ்சேனை அரசியல் உறுப்புகளும் கட்சி அமைப்புகளும் நாளாந்த அரசியல் பணியினை நிறைவேற்றின.

''உள்நாட்டு யுத்தத்தின் கடினமான காலங்களில் நாம் எப்படிச் செயல்பட்டோம்?'' என்ற கேள்வியை எழுப்பிய லெனின் பின்வருமாறு பதிலளித்தார்: ''நாம் செஞ்சேனையில் எமது கட்சியின் தலைசிறந்த சக்திகளை ஒன்று குவித்தோம்: எமது சிறந்த தொழிலாளர்களைத் திரட்டினேம்; எமது சர்வாதிகாரத்தின் ஆழமான வேர் மட்டங்களில் புதிய சக்திகளை நாம் தேடித் திரட்டினேம்''4

★ ★

சோவியத் குடியரசைப் பாதுகாக்கும் சாதனத்தை உருவாக்க ஆரம்பித்த கட்சியும் அரசும் மிகமிக குறுகிய காலத்தில் ஒரு தொழிலாளர்—விவசாயிகள் ராணுவத்தை தோற்றுவித்தது.

உள்நாட்டு யுத்த காலத்தில் ராணுவத்தைக் கட்டியெழுப்புவதில் கிடைத்த வெற்றிக்கான அடிப்படைக் காரணத்தைக் குறிப்பிட்ட லெனின் கட்சி மார்க்ஸியத்திற்கு விசுவாசமாக இருந்ததும், முற்றிலும் புதியதொரு சூழலில் அதை ஆக்கபூர்வமாகப் பிரயோகித்ததும் பிரதானமானவையாகும் என்ருர்.

---

2 வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், பா. 30, பக் 147
3 வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், பா. 31. பக். 178
4 வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், பா. 33, பக். 481

லெோயா சொ்டின்,
விஞ். வேட். (வரலாறு)

# வளர்ச்சி குறைந்த சமுதாயங்களை நவீனமயமாக்கல் "சோவியத் பரிசோதனை"

வளர்ச்சியுற்று வரும் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன மெரிக்க நாடுகள் சமூக—பொருளாதார மாற்றப் பாதையில் செல்லத் தொடங்கும்போது, அவை தமது நூற்றுண்டுகால பின்தங்கலை குறுகிய காலத்திற்குள் ஒழிக்கக்கூடியதோர் எதிர்கால வளர்ச்சிக்கான மாதிரியைத் தேடுகின்றன. எனவே ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்டு, பின்தங்கியிருந்த மக்கள் மாபெரும் சமூக, தேசிய முன்னேற்றத்தைக் கண்ட சோவியத் யூனியனையே ஏறெடுத்து நோக்குகின்றன.

சோவியத் தேசத்தின் அவ்வித வெற்றிகளை சில பூர்ஷ்வா அறிஞர்கள்கூட அங்கீகரித்துள்ளனர். ஒரு பேட்டியில் பிரிட்டனைச் சேர்ந்த பிரபல வரலாற்றுசிரியர் ஈகார் இப்படிக் கூறுகிறார்: ''1917க்கு முன் எவருமே எதிர்பார்த்திராத, நினைத்தும் பார்த்திராத விதத்தில் கடந்த 60 ஆண்டுகளில் ரஷ்யாவை மிகப்பெரியதோர் தொழிற்துறை தேசமாக மாற்றியமைத்த உறுதிப்பாடு, தியாகம், அமைப்பாக்கம், கடும் உழைப்பு என்பவற்றையே நான் எண்ணிப் பார்க்கிறேன். எனினும் அவற்றைவிட 1917முதல் சாதாரண மக்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மறுமலர்சிகளையே அதிகமாக எண்ணிப் பார்க்கிறேன். 80 சதவீதத்திற்குமதிகமானோர் படிப்பற்றவர்களாய் அல்லது அரைகுறை படிப்புள்ள விவசாயிகளாயிருந்த ரஷ்ய நாட்டை—60 சதவீதமானோர் நகர்ப்புறத்தோராயுள்ள அந்நாட்டை—முற்றிலும் படித்தோருள்ள நாடாக மாற்றப்பட்டுள்ளது.''

## சமூக அபிவிருத்தியின் இரண்டு மாதிரிகள்

முதலாளித்துவ மேற்குலகிலோ அவ்வித மிதமான கணிப்புகளும் கருத்துகளும் மறைக்கப்படுவதோடு சோவியத் யூனியனின் சமூக— பொருளாதார மாற்றங்கள் அதன் எய்தல்கள் என்பனவெல்லாம் திரித்துக் கூறப்படுகின்றன. இப்படிச் செய்வதன் மூலம் தேசிய இனப் பிரச்னைகளைத் தீர்க்கும் லெனினிய கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்ட சோவியத் வளர்ச்சியையும், சகோதரத்துவ நட்

புறவையும், மக்கள் தம் பரஸ்பர ஒத்துழைப்பையும் நவீனமயமாக்கல் கொள்கை என்பதை முன்வைத்து எதிர்க்கின்றனர்கள். இந்த நவீனமயமாக்கல் கொள்கை என்பதன் அர்த்தம்தான் என்ன?

சோஷலிஸ, முதலாளித்துவ சமூக அமைப்புகளுக்கிடையிலான அடிப்படை வேறுபாடுகளை மறுதலிக்கின்ற பூர்ஷ்வா பண்டிதர்களின் முயற்சிகளையே நவீனமயமாக்கல் கோட்பாடு பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பின்தங்கலிலிருந்து முன்னேற்றத்திற்கு மாறுகின்ற கோட்பாடுகள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை தத்துவத்தை வகுத்த லெனினாலேயே இடப்பட்டன. அவ்வித வளர்ச்சிப் போக்கின் சாராம்சம் பின்தங்கிய மக்கள் முதலாளித்துவக் கட்டத்தைத் தாண்டி சோஷலிஸத்திற்குப் படிப்படியாக மாறுவது என்பதேயாகும். அதற்கான பிரதான தேவைகள் வெளிநாட்டு மூலதனமிடலை இல்லாமலாக்குவது, தனியார் மூலதனமிடலில் கட்டுப்பாடு விதிப்பது, பொருளாதாரத்தில் அரச துறையை அபிவிருத்தி செய்வது, நிலப்பிரபுத்துவத்தினதும் விசாலமான நிலவுடைமையினதும் எச்சசொச்சங்களையும் களைவது, தொழிலாள மக்கள் தம் நல்வாழ்வை உயர்த்துவது மற்றும் பொதுக் கல்வி, சுகாதார சேவை, விஞ்ஞானம், கலாசாரம் என்பவற்றை அபிவிருத்தியாக்குவது என்பனவாகும்.

இதைத்தான் உலக வரலாற்றிலேயே முதற்தடவையாக சோவியத் மத்திய ஆசிய மக்கள் மேற்கொண்டார்கள்.

இதுதான் வளர்ச்சி குன்றிய சமுதாயங்களை நவீனமயமாக்கும் சோவியத் மாதிரியாகும்.

## பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தல்

1917 மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு முன் மத்திய ஆசியா ஒரு விவசாயப் பிராந்தியமாகவே இருந்தது. 1908ல் துர்கெஸ்தானின் தொழிற்துறை உற்பத்தி தலைக்கு சராசரியாகப் பார்த்தால் சென் பீட்டர்ஸ்பெர்க் குபார்னியாவினது (தற்போது லெனின் கிராட் பிராந்தியம்) பதினைன்கில் ஒன்றைவிட அதிகமாயிருக்கவில்லை; தொழிலாளர் தொகையைப் பொறுத்தமட்டில் பதின்மூன்றில் ஒன்று(1000 பேருக்கு) என்ற வீதத்திலேயே இருந்தது. 1913ல் தொழிலாள வர்க்கம் உஸ்பெகிஸ்தான் மக்கள் தொகையில் 5 சதவீதம் மட்டுமே, அத்துடன் தஜிகிஸ்தான் மக்களைவிட 0.2 சதவீதம் குறைவுமாகும். 1916ல் துர்கெஸ்தானில் 242 தொழிலாளர்கள் மட்டுமே இருந்தனர், இவர்களிலும் பெரும்பாலானோர் ரயில்பாதை இடுவோராயிருந்தனர்.

கடந்த 63 ஆண்டுகளின் சோவியத் ஆட்சியில் விவசாயத்தில் மகத்தான மாற்றங்கள் மத்திய ஆசியாவில் ஏற்பட்டுள்ளன; தொழிற்துறையைப் பொறுத்தளவில் இங்குள்ள குடியரசுகளின் மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 60 சதவீதமும், தேசிய வருவாயில் 50சதவீதத்திற்குமதிகமானதும் இங்கு உள்ளது.

1940—1980 காலப்பகுதியில் சோ. சோ. கு. ஒ. விவசாயத்துறையில் ஈடுபடுத்தப்பட்ட டிராக்டர்களின் தொகை 3.7 தடவைகளால் அதிகரித்துள்ளது, அது உஸ்பெகிஸ்தானில் 5.3 தடவைகளாலும், கிர்கீஸியாவில் 4.5 தடவைகளாலும், தஜிகிஸ்தானில் 5 மடங்காகவும், துருக்மேனியாவில் சுமார் 6 மடங்குகளாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

1950களின் ஆரம்பத்திலேயே இக் குடியரசுகளில் முதலாவது பருத்தி அறுவடை இயந்திரங்கள் இடம்பெற்றன. 1950ல் மூன்று சதவீத பருத்தியைச் சேகரித்தன. 1977ல் 60 சதவீதமானவற்றைச் சேகரித்தன. அங்கு எவ்வித எய்தல்கள் ஈட்டப்பட்டுள்ளன என்பதற்கு இது ஒன்றே போதுமானதாகும். எனவே பருத்தி உற்பத்தியில் முழு உலகிலுமே சோவியத் மத்திய ஆசியா முன்னணி வகிக்கிறது என்பது ஆச்சரியமானதல்ல.

இந்த இயந்திரங்களெல்லாம் அவ்வந்தகுடியரசுகளிலேயே உருவாக்கப்பட்டவையாகும் என்பதும் ஒரு சிறப்பம்சமாகும். சோவியத் காலத்தில் விசேடமாக இரண்டாம் உலக யுத்தத்தின் பின் சோவியத் மத்திய ஆசியா நவீன எந்திரவியல், உலோகவியல், எண்ணெய், இயற்கை வாயு, நிலக்கரி, இரசாயனத் தொழில் என்பவற்றிலெல்லாம் பெரும் வளர்ச்சியுற்றுள்ளது.இங்கு 2000க்கு மேற்பட்ட பாரிய தொழிற்சாலைகளுள்ளன. இன்று கிர்கீஸியாவில் ஒரு நாளின் தொழிற்துறை உற்பத்தி 1913ல் முழு ஸார் கால ரஷ்யாவின் உற்பத்திக்கும் ஈடானதாகும். இன்று உஸ்பெகிஸ்தானில் 100க்கும் அதிகமான தொழில்களுள்ளன. இத்தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்கள் இன்று எல்லா யூனியன் குடியரசுகளிலும் விற்பனையாவதோடு 70க்கும் மேற்பட்ட பிறநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

## நல்வாழ்வும் கலாசார வளர்ச்சியும்

சோவியத் மத்திய ஆசியாவின் வாழ்க்கைத் தரங்களிலான பாரிய வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையாக எல்லா பொருளாதார எய்தல்களும் இருக்கின்றன. 1976ல் தொழிற்சாலை, அலுவலக ஊழியர்கள் சமூக பயனீட்டு நிதிகளிலிருந்து பெற்ற நிதி நன்மைகளுடன் கூடிய சராசரி ஊதியம் சோவியத் மத்திய ஆசியாவில் 195-201 ரூபிள்களுக்கு இணையானதாகும். (ஒரு ரூபிள்-1.55 அமெரிக்க டாலர்) 1978ல் கஸாக்ஸ்தானில் 100000 பேர்களுக்கு 30

டாக்டர்களிருந்தார்கள்; இது உஸ்பெகிஸ்தானிலும் துருக்மேனியாவிலும் 27 ஆகும். வீட்டுப் பிரச்னை வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டு வருகிறது. 1978ல் 10000 பேருக்கு 80 புதிய தொடர் மாடி வீடுகள் என்ற விகிதத்தில் சோ.சோ. கு. ஒ. வில் கட்டப்பட்டன. இது உஸ்பெகிஸ்தானில் 68, கஸாக்ஸ்தானில் 76 ஆகும். சோவியத் யூனியனில் தேசிய இனங்களினதும் அவற்றின் மொழி, கலாசார வளர்ச்சிகள் பற்றியும் ஈஹூயிஸ் ''சோவியத் யூனியனில் பன்மொழிகள்'' என்ற நூலில் இப்படிக் குறிப்பிடுகிறார்: ''வட்டாரப் பேச்சு மொழிகளை இலக்கிய மற்றும் போதனு மொழிகளாக வளர்க்கின்ற இந்தப் பணியானது சோவியத் ஆட்சியின் ஆரம்ப முதலே தொடங்கப்பட்டது...எனவே சுமார் 50 சிறுபான்மை பேச்சு மொழிகளுக்கு முதன் முதலாக எழுத்துகள் உருவாக்கப்பட்டன.''

சோவியத் காலத்தில் சோவியத் மத்திய ஆசியா 100 சதவீத படிப்பறிவைப் பெற்றது. 1976ல் வேலைசெய்த 1000 பேர்களில் 767 பேர்கள் சோ.சோ.கு.ஒ. வில் சராசரியாக உயர்தர அல்லது நடுத்தரக் கல்விபெற்றிருந்தனர். இது ரஷ்ய சம்மேளனக் குடியரசில் 771, உஸ்பெகிஸ்தானில் 779, கஸாக்ஸ்தானில் 770, கிர்கீஸியாவில் 773, தஜிகிஸ்தானில் 737, துருக்மேனியாவில் 795. இத்துடன் புரட்சிக்கு முந்திய சோவியத் மத்திய ஆசியாவின் நிலைமையை ஒப்பிட்டால்—படித்தவர்கள் உஸ்பெக்கியர் 1.6 சதவீதம், துருக்மேனியர்கள் 0.6 சதவீதம், தஜிக்கியர் 0.5 வீதம்.

சோவியத் மத்திய ஆசியாவில் போதனைகள் தேசிய மொழிகளிலேயே இடம் பெறுகின்றன. இங்கு உயர்தர, விசேட நடுத்தர கல்வி ஸ்தாபனங்களும், தேசிய கலை அரங்குகளும், வெளியீட்டகங்களும் உள்ளன. சோ.சோ. கு.ஒ. வின் 89 மொழிகளில் புத்தகங்களும் பிரசுரங்களும் வெளியிடப்படுகின்றன. ஆனால் 1913 ஆம் ஆண்டுகளில் துர்க்மேனிய, கிர்கீஸிய மொழிகளில் ஒரு புத்தகமோ பிரசுரமோ கூட வெளியிடப்படவில்லை. ஆனால் 1977ல் 37 லட்சம் பிரதிகளும், கிர்கீஸ் மொழியில் 43 லட்சம் பிரதிகளும் வெளிவிடப்பட்டுள்ளன.

எனவே சோவியத் மத்திய ஆசியா வளர்ச்சி குன்றியிருக்கிறது என்ற பூர்ஷ்வா பிரசாரங்களெல்லாம் பொய்ப்பிக்கப்படுகின்றன.

''தூரத்து ரஷ்யனற்ற பிரதேசம்'' என்ற மனவுரு இன்று பழைய வரலாறுகிவிட்டது-அதுவே சோஷலிஸத்தின் ஒரு எய்தலாகியுள்ளது. எதிர்வரும் சோ.க.க. வின் 26வது காங்கிரசானது, லெனினிய தேசிய இனக் கொள்கையால் வழிநடத்தப்பட்டு சோவியத் ரஷ்யனற்ற குடியரசுகள், தன்னுட்சிப் பிராந்தியங்கள், தன்னுட்சிப் பிரதேசங்களின் பொருளாதார எழுச்சிக்கான மார்க்கத்தை வகுக்குமென நம்புகிறோம்.

மிகைல் கொர்பாச்சேவ், சோ. க. க. மத்தியக் கமிட்டி
அரசியல் குழு உறுப்பினர், மத்திய கமிட்டிச் செயலாளர்.

## சோ. க. க. 26வது காங்கிரஸை எதிர்கொண்டு

# சோவியத் விவசாயம்: எய்தல்களும், பிரச்னைகளும்

சோ. க. க. வின் தற்போதைய அரசியல் போக்கில் முக்கியமானதோர் அம்சமாக விவசாயக் கொள்கை அமைகிறது. சோவியத் சமுதாயத்தின் அனைத்தம்ச முன்னேற்றத்துக்கான நலன்கள் சோவியத் யூனியன் சக்திமிகு தொழிற்துறையை மட்டுமல்ல உன்னத அபிவிருத்தியுற்ற விவசாயத்தையும் கொண்டிருப்பதைக் கண்டிப்பானதாக்குகிறது.

## சில பெறுபேறுகள்

சமீப காலத்தில் சோவியத் விவசாயம் நல்ல பலன் தருவதாயுள்ளது. சிறந்த உபகரணங்களோடு நவீன தரத்தையும் எய்தியுள்ளது. 1980ன் ஆரம்பத்தில் விவசாயத்திலான அடிப்படை உற்பத்திச் சொத்துகள் 22 ஆயிரம் கோடி ரூபிள்களை எய்தியது. (ஒரு ரூபிள் 1.55 டாலர்கள்) இது 1965 ஐவிட 29 தடவை அதிகமாகும். அத்துடன் சக்தி மற்றும் மின்சார ஆற்றலும் 25 தடவைகளுக்கு மதிகமாக்கப்பட்டுள்ளது.

இவ்வித முன்னேற்றங்களுக்குக் கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் பொறுப்பாக இருந்துள்ளன. பல புதிய டிராக்டர் மற்றும் விவசாய இயந்தியரத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதோடு, பழைய தொழிற்சாலைகளில் பாதிக்கு மேற்பட்டவை புனரமைக்கப்பட்டன. இதனால் கூட்டு மற்றும் அரசப் பண்ணைகளில் இயந்திர மற்றும் டிராக்டர் வசதிகளை முழுமையாக புதுப்பிக்கும் சாத்தியம் ஏற்பட்டது.

விவசாயத்தில் உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியில் பரந்த நிலச் சீர்திருத்தமே பெரும் பங்கை வகித்துள்ளது. மத்திய ஆசியக் குடியரசுகளிலும், வட காகேஷஸின் தரிசு நிலங்களிலும், வொல்கா பிரதேசத்திலும், தென் உக்ரேன் பகுதியிலும், தேசத்தின் ஏனைய பிராந்தியங்களிலும் பிரமாண்டமான எந்திரவியல் பாசன அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ரஷ்ய சம்மேளனக் குடியரசின் கருமண்ணற்ற பகுதிகளில் முன்னெப்போதும் கேள்வியுறாத அளவில் நிலச் சீர்திருத்த தொழிற் திட்டங்கள் நடைமுறையிலுள்ளன. இப்போது தேசத்தில் மூன்று கோடி ஹெக்டர்களுக்குமதிகமான பிரதேசம் பாசனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பெருமளவு அறுவடை உத்தரவாதமாகியுள்ளது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபிள்கள் விவசாய வளர்ச்சிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பத்தாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் (1976-1980) விவசாயத்தில் சராசரி வருடாந்த மொத்த உற்பத்தி ஏழாவது ஐந்தாண்டுத்திட்ட (1961—1965) காலகட்டத்தைவிட 50 சதவீதம் அதிகமானதாகும். அப்போது தேசத்தில் வருடந்தோறும் சராசரியாக 13 கோடி தொன் தானியம் இருந்தால் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் அது 7 கோடி 90 லட்சம் தொன்கள் அதிகமாகும். பருத்தி மற்றும் ஏனைய தாவரங்களிற் பாரிய வளர்ச்சி எய்தப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்பிலும் பெரும் வளர்ச்சி காணப்பட்டுள்ளது.

1965 முதல் 1979 வரை நுகர்வானது தலைக்கு சராசரியாக பின்வரும் விதத்தில் அதிகரித்துள்ளது. இறைச்சி 41 சதவீதம், பால் 27%, முட்டை 88%, பழவகை 36%, காய்கறிகளும் முலாம் பழங்களும் 32% சோ. சே. கு. ஒ. வில் உணவின் மொத்த கலோரி பிரமாணம் ஒருவருக்குத் தினத்திற்கு சராசரியாக 3,200 கலோரிகளாகும். இது வளர்ச்சியுற்ற உலக நாடுகளின் அளவாகும். அடிப்படை உணவுப் பொருட்களின் சில்லறை விலைகள் ஸ்திரமாக இருப்பதோடு அனைத்துமட்ட தொழிலாளர்கள், ஊழியர்களின் ஊதியங்களும் வருவாய்களும் அதிகரிக்கின்றன; வாழ்க்கைத் தரமும் உயர்கிறது.

## பிரச்னைகளும் எதிர்பார்ப்புகளும்

உணவுப் பொருட்களிலும் பாவனைப் பொருட்களிலும் தொழிலாள மக்களின் அதிகரித்துவரும் தேவைகளை முழுமையாக திருப்தி செய்யும் முயற்சிகளில் இன்று சோ. க. க. ஈடுபட்டுவருகிறது. எனவே விவசாயத்திலும் கால்நடை உற்பத்திப் பொருட்களிலும் அதிகரிப்பைக் காணவேண்டி

யுள்ளது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட (1981—1985) காலத்தில் சராசரி வருடாந்த தானிய விளைச்சலை 23கோடி 80 லட்சம்—24 கோடி 30 லட்சம் வரையாவது அதிகரிக்க வேண்டியுள்ளது.

எல்லா இடங்களிலும் — சிக்கலான நிலை மற்றும் சீதோஷ்ண நிலைமைகளுள்ள பிராந்தியங்களிலும் கூட விவசாயத்தில் ஸ்திரத்தை எய்வது சாத்தியமாகும் என்பதை நடைமுறை காட்டுகிறது. சாதகமற்றதாயிருந்த 1979ம் ஆண்டிற்கூட சுமார் 8000 கூட்டு, அரச பண்ணைகளில் (20 சதவீதமானவை) ஒரு ஹெக்டருக்கு 25 சென்ட்னர்களும் அதற்கு மேலும் பலனைத் தந்தன. 1620 பண்ணைகளில் 40 சென்ட்னர்களுக்கதிகமான பலன் காணப்பட்டது. இவையெல்லாம் பெரும் உழைப்பினாலேயே எய்தப்பட்டன. பெரும்பாலான பகுதிகளில் மூடுபனி இல்லாத இடமே இல்லை எனலாம்.

## ஒரு பாரிய குறிக்கோள்

கூட்டுறவு மற்றும் அரச பண்ணைகளில் கால்நடைகளை வளர்ப்பதற்கு சோவியத் யூனியனெங்கும் பெரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உற்பத்தியில் பெரும் முனைப்பு, தீவிரமான கால்நடைகளை கொழுக்கச் செய்வதற்கான பணிகள், என்பனவே இத் துறையில் அபிவிருத்திக்கும் அதிக இறைச்சி உற்பத்திக்கும் வாய்ப்பளிக்கின்றன,

ஒவ்வொரு பசுவிலும் அதிக அளவு பாலைப் பெறுவதற்கான முயற்சிகளும் கைக்கொள்ளப்படுகின்றன. சிறந்த இன கால்நடை வளர்ப்பு ஊக்குவிக்கப்படுகிறது.

இவற்றிற்கெல்லாம் சத்துமிக்க சிறந்த தீவனங்களும் இன்றியமையாதன என்பதால் அவற்றின் தரமும் விஞ்ஞான ரீதியில் உயர்த்தப்படுகின்றன.

பண்ணைகள் தோறும் இவ் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் அதேவேளையில் விவசாயிகளின் தனிப்பட்ட கால்நடை வளர்ச்சியிலும் அபிவிருத்திக்கு ஊக்குவிப்பு அளிக்கப்படுகிறது, எனவே மிருகங்கள். பட்சிகள் வளர்ப்பு பெருகிவருகிறது.

## விவசாய தொழில்மயமாக்கலின் பிரச்னைகள்

விவசாய ஆற்றலிலான வளர்ச்சியானது விவசாயத்தை தொழில்மயமாக்கல், கால்நடை வளர்ப்பு, எல்லா உற்

பத்தி மாற்றப் போக்குகளையும் எந்திரமயமாக்கல் என்பவற்றோடு இரண்டற பிணைக்கப்பட்டதேயாகும். விவசாயத்தில் உற்பத்திச் சொத்துகளாக இயந்திரங்கள், சாதனங்கள், போக்குவரத்து என்பன 20 சதவீதத்திற்குமதிகமாகும். இது சுமார் 4500 கோடி ரூபிள்களாகும்.

இயந்திர மற்றும் டிராக்டர்களின் உற்பத்தி அமைப்பு என்பவற்றிலேற்பட்டுள்ள பாரிய மாற்றங்கள் என்பனவெல்லாம் விவசாயத்தில் இயந்திரங்களைப் பாவிப்பதில் சிறந்த அமைப்பாக்கத்தை இன்றியமையாததாக்குகின்றன.

டிராக்டர் மற்றும் இயந்திர தயாரிப்புகள் விவசாயத்தை ஒரு தொழில் அடிப்படையானதாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. கடந்த 15 ஆண்டுகளில் இவற்றினுற்பத்தி 3.4 தடவைகளால் அதிகரித்துள்ளது. 400க்கு மேற்பட்ட புதிய விவசாய இயந்திரங்களும் நுட்பங்களும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் கால்நடை வளர்ப்பு, தீவன உற்பத்தி என்பவற்றிற்கான இயந்திரங்களின் தயாரிப்புகள் 1.7 தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

★

கட்சியும் தேசமும் சோ.க.க. விவசாயக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்றன. நீண்டகால மாற்றம் தற்போதைய குறிக்கோள்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான சோவியத் மக்களின் முயற்சிகளை கட்சியே வழிநடத்துகிறது.

கொம்யூனிஸ்ட் இல. 11
1980.

## சோஷலிஸமும் இன்றைய உலகும்

# சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் சர்வதேசியம்

**சர்வதேசியமும், ஏனைய நாட்டு மக்களுடனான ஒருமைப்பாடும் சோ.சோ.கு.ஒ.வின் வெளிநாட்டுக் கொள்கையின் வர்க்க குணாம்சத்தினைத் தீர்மானிக்கின்றன.**

சர்வதேசியத்தை தனது வெளிநாட்டுக் கொள்கையின் நியமமாகப் பிரகடனஞ்செய்துகொண்டு உலக சமாதானத்திற்காகவும், நவீன சமுதாயத்தின் வாழ்க்கையிலிருந்து யுத்தம், அடக்குமுறை என்பவற்றை பூரணமாக இல்லாதொழிப்பதற்காகவும் வளர்முக நாடுகள் உட்பட சகல நாடுகளுக்கிடையிலும் பரஸ்பர லாபந் தரும் ஒத்துழைப்பைப் பேணிவதற்காகவும், அந்நாடுகளின் சமத்துவமான அபிவிருத்திக்காகவும் சோவியத் ஒன்றியம் உறுதியாகப் பணியாற்றிவருகிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க நாடுகள் உட்பட சகல நாடுகளினதும் சட்டபூர்வமான உரிமைகளை, தமது சொந்த எதிர்காலத்தினை தாமே தீர்மானிக்கும் உரிமைகளை, நவீன நாகரீகத்தின் சாதனைகளை அனுபவித்து மகிழும் உண்மையான சந்தர்ப்பத்தினைக் கொண்டுள்ள சுதந்திரமான அபிவிருத்திக்கான உரிமைகளை பாதுகாத்துப் பேணுவதில் தனது சர்வதேச பாத்திரத்தை சோவியத் ஒன்றியம் காண்கிறது. சமாதான ஆக்ஞையின் 1917ல் பிரகடனஞ்செய்யப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் வெளிநாட்டுக் கொள்கையின் சாராம்சம் இதுவேயாகும்.

## ஆரம்பகால ஆண்டுகள்

சோவியத் மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியினதும், சோவியத் அரசினதும் ஸ்தாபகரான விளாதிமிர் இலியிச் லெனி

னுடன் சேர்ந்து நாட்டின் சர்வதேசியக் செயற்பாடுகளை சரியானமுறையில் ஆற்றிவந்தார்கள். சோவியத் வெளி நாட்டுக் கொள்கையின் அடித்தளத்தினை அவரே உருவாக்கினார். 1917 மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு முன்னரே அவர் அதனை உருவாக்கியிருந்தார். ''ஒரு தேசத்தை உருவாக்கும் சகல தேசிய இனங்களுக்குமான சுயநிர்ணய உரிமையினை''1 முதன் முதலில் முன் வைத்த 1903 இரண்டாவது கட்சிக் காங்கிரஸின் அறிக்கையினையும் அவரே உருவாக்கினார் பிரிந்து செல்லும் உரிமையினையும், தனியான இறைமையுள்ள தேசங்களை உருவாக்கும் உரிமையினைவும் உள்ளடக்கிய தேசிய இனங்களின்கிய நிர்ணயஉரிமையைப் பிரச்னைகளுக்கான லெனினுடைய அணுகுமுறையில்முற்றிலும் புதியதோர் அம்சம் யாதெனில் இக்கொள்கை அப்போதைய ரஷ்ய ஏகாதிபத்தியத்தின் மக்களுக்கு மட்டுமன்றி ஆசிய, ஆபிரிக்க மக்களை உள்ளடக்கிய உலகிலுள்ள அடக்கியொடுக்கப்பட்ட தேசிய இனங்கள் யாவற்றிற்கும் பொருத்தமானதாக இருப்பதாகும்.

கலோனியல் அடக்குமுறையினைக் குலைப்பதற்கான போராட்டத்திற்கும் 1914-1918 ஏகாதிபத்திய உலகயுத்தத்திலிருந்துவிலகிக்கொள்வதற்குமான போராட்டத்திற்குமிடையில் ஒரு நெருக்கமான தொடர்பு இருப்பதனை லெனினும் போல்ஷ்விக்குகளும் (இவ்வாறுதான் அக்காலத்திய ரஷ்யகேம்யூனிஸ்டுக்கள் அழைக்கப்பட்டார்கள்) கண்டு கொண்டார்கள் ''சகல குடியேற்ற நாடுகளுக்கும், அடக்கப்பட்ட சகல மக்களுக்கும், உரிமைகள் மறுக்கப்பட்ட அனைவருக்கும் சுதந்திரம் வழங்கப்படவேண்டுமென்ற நிபந்தனையின் மீது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சகல மக்களுக்கும் சமாதானத்தை பிரேரிக்கவேண்டுமென்று''2 அக்டோபர் 1917ல் போல்ஷ்விக்குகள் அரசாங்கத்தைக் கையேற்கும் போது லெனின் சுட்டிக்காட்டினார். மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியினைத் தொடர்ந்து சோஷலிஸ குடியரசு இதனுடன் தொடர்புடைய பல காரியங்களை நிறைவேற்றியது. 1918ல் ஜேர்மனியுடன் செய்துகொள்ளப்பட்ட பிறெஸ்ற் சமாதான ஒப்பந்தத்தின்படி முதலாவது உலக மகாயுத்தத்தில் ஈரானிய, ஆப்கான் மக்களின் சமாதானத்தையும், பந்தோபஸ்த்தையும் உறுதி செய்து கொள்வதற்கான ஏற்பாட்டினை சோவியத் ரஷ்யா செய்து கொண்டமையை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

---

1 வி.ஐ. லெனின் திரட்டு நூல்கள், பாகம் 6, பக். 30

2 வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், பாகம் 21, பக். 403-404

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியினைத் தொடர்ந்து தேசிய விடுதலை இயக்கம் வரலாற்றில் முதன் முறையாக ராஜாங்க ஆதரவைப் பெற்றது. ஏகாதிபத்திய அடக்குமுறை, சர்வாதிகாரப் போக்கு என்பவற்றிற்கு எதிரான, ஆசிய, ஆபிரிக்க மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு சோவியத் ரஷ்யா தனது முழுமையான ஆதாரவினைத் தெரிவித்தது. நிலையான, தார்மீக, ஜன நாயக சமாதானத்தை உறுதிசெய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் பொருட்டு நிலப்பிரபுத்துவத்தின் சகல வடிவங்களுக்கும் முடிவுகட்டும் வகையில் சமாதான ஆக்ஞை அமைந்திருந்தது. ஏகாதிபத்திய அடக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான தேசங்களின் போராட்டத்தை நோக்கிய சர்வதேசிய, வர்க்க சாராம்சம் சோவியத் அரசாங்கத்தின் கொள்கையாக்கம் செய்யும் ஆவணங்களின் தொடரில் மேலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இதற்கு நல்லதோர் உதாரணமாக 1917 டிசெம்பர் 3ந் திகதி நிறைவேற்றப்பட்ட ''ரஷ்யாவினதும், கிழக்குப் பிராந்தியங்களினதும் உழைக்கும் முஸ்லீம்கள் அனைவருக்கும்'' என்ற சோவியத் அரசாங்கத்தின் ஆவணத்தை எடுத்துக் கொள்ளலாம். அதன் ஒரு பகுதி பின்வருமாறுள்ளது: ''உங்கள் நாட்டின் எஜமானர்கள் நீங்களாகவே இருக்க வேண்டும்! உங்களுக்குப் பொருத்தமானதென நீங்களே கருதும் வழியில் உங்களுடைய வாழ்க்கையினை நீங்களே அமைத்துக்கொள்ளவேண்டும்! உங்களுடைய இலட்சியங்களைத் தீர்மானிக்கும் உரிமை உங்கள் சொந்தக் கரங்களிலேயே உள்ளது!''

கிழக்கிலுள்ள தனது அயல்நாடுகளுடன் சோவியத் அரசு தனது உறவுகளை உருவாக்கிக் கொள்வதற்கு இந்தச் சிந்தனைகளும், இந்தக் கொள்கைகளும் வழிகாட்டுகின்றன 1921ம் ஆண்டில் ஈரான், ஆப்கானிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின்படி சோவியத் ரஷ்யாவானது ஜாரிஸ ரஷ்யாவின் கொள்கையிலிருந்து பூரணமாக வேறுபட்டு நின்று அயல் நாடுகள் தமது இலக்குகளைத் தாமே நிர்ணயிக்கும் சட்டபூர்வமான உரிமைகளை அங்கீகரிக்கிறது. முற்றிலும் சமத்துவமான, பரஸ்பர கௌரவமளிக்கும் அடிப்படையில் கிழக்கிலுள்ள நாடுகளுடன் அது வர்த்தக, பொருளாதார மற்றும் ஏனைய உறவுகளை ஆரம்பித்துப் பேணிவருகிறது.

## சர்வதேசியம் இன்று

இன்றும்கூட, விடுதலையடைந்த நாடுகளுக்கு சர்வதேசிய ரீதியிலான உதவிகளை வழங்கிவரும் சோவியத் ஒன்றியமானது ஏகாதிபத்தியம், நியோ கலோனியலிஸம் என்பவற்றிற்கெதிரான அவற்றின் போராட்டங்களுக்கு

வளர்முக நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருக்கும் கொள்கைக்கிணங்க ஆதரவு வழங்கி வருகிறது. கட்சியின் அதிமுக்கிய ஆவணங்கள் இவைபற்றிக் குறிப்பிடுகின்றன, "ஒவ்வொரு குடிமகனும், ஒவ்வொரு நாடும் தனது சொந்த அபிவிருத்திக்கான பாதையினைத் தேர்ந்தெடுக்கும் பரிசுத்தமான உரிமையினை எமது லெனினிஸ வெளிநாட்டுக் கொள்கை கௌரவிக்கிறது. ஆனால் அதேபோது எங்களுடைய கருத்துக்களை மறைத்துக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை. ஏனைய இடங்களைப் போன்றே வளர்முக நாடுகளிலும் முற்போக்கான, ஜனநாயக, தேசிய விடுதலைச் சக்திகளின்பக்கமே நாம் இருக்கின்றோம், அத்துடன் போராட்டங்களில் அவர்களை எங்கள் நண்பர்களாகவும், தோழர்களாகவும் நாங்கள் கருதுகிறோம் தமது சுதந்திரத்திற்காகப் போராடிவரும் மக்களுக்கு எமது கட்சி தொடர்ந்து தனது ஆதரவினை வழங்கி வரும் இவற்றினை ஆற்றுவதற்காக எவ்வித சாதகங்களையும், சலுகைகளையும், இராணுவ அடிப்படையிலான அரசியல் ஆதிக்கத்தையும் சோவியத் ஒன்றியம் எதிர்பார்க்கவில்லை. எமது புரட்சிகர சிந்தனைகளுக்கு அமைவாகவும், எமது கம்யூனிஸ சித்தாந்தங்களுக்கு அமைவாகவுமே நாங்கள் செயற்பட்டு வருகிறோம்,"3 என்று சோ.க.க. மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனிட் பிரெஷ்னேவ் வலியுறுத்தியுள்ளார்.

தமது தேசிய, சமுதாய விடுதலைக்காகப் போராடும் மக்களுக்கு ஆதரவு வழங்குதல், வளர்முக நாடுகளின் பொருளாதார, அரசியல் விடுதலையினை வலுப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அடக்குமுறைச் சக்திகளின் ஆக்கிரமிப்பிலிருந்து அவற்றின் தேசிய இறைமையினையும், பிரதேச ஒருமைப்பாட்டினையும் பாதுகாத்தல், ஆசிய—ஆபிரிக்க மக்களின் சமூக—பொருளாதார முன்னேற்றத்திற்கான சகல சாத்தியப்பாடுகளையும் உருவாக்குதல் என்பன லெனினால் உருவாக்கப்பட்ட சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான சர்வதேசியச் செயற்பாடுகளாக என்றும் இருந்துவருகின்றன.

சோவியத் ஒன்றியத்திற்கும், வளர்முக நாடுகளுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் பாரிய முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. இங்குகூட, இருபக்க நட்புறவு, ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் விசேஷ இடத்தினை வகிக்கின்றன. சோவியத் ஒன்றியமானது இவ்வாறான ஒப்பந்தங்களைப் பின்வரும் வளர்முக நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்டுள்

---

3 சோ.க.க.வின் 25வது காங்கிரஸ்.ஆவணங்களும், தீர்மானங்களும், மாஸ்கோ, ஏ. பி. என். வெளியீட்டு நிறுவனம்' 1976, பக். 16

ளது: இந்தியா (1971), ஈராக் (1972), அங்கோலா (1976), மொஸாம்பிக் (1977), எத்தியோப்பியா (1978), ஆப்கானிஸ்தான் (1978), தென்யேமன் (1979), சிரியா (1980). இந்த ஆவணங்கள் சோ. சோ. கு. ஒ. விற்கும் இந்நாடுகளுக்கு மிடையிலான சகலதுறை ஒத்துழைப்புகளின் வளர்ச்சிக்கான உறுதியானதோர் அடித்தளமாக இருக்கின்றன.

பொதுவாகக் கூறுவதாயின், சோவியத் பொருளாதார, தொழில்நுட்ப உதவிகள் வளர்முக நாடுகளிலுள்ள அரசதுறையினை வலுப்படுத்துவதனையே இலக்காகக் கொண்டுள்ளன. இது ஆசிய, ஆபிரிக்க, லத்தீனமரிக்க மக்கள் தமது பொருளாதார சுதந்திரத்தினை ஏகாதிபத்திய ஏகபோகங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து உறுதியாகப் பாதுகாப்பதற்கும் கலோனியலிஸத்தின் விளைவாய் அங்கு குடிகொண்டுள்ள மிகப்பழமைவாய்ந்த பிற்போக்குத்தனத்திற்கு எதிராகப் போராடுவதற்கும் வசதியேற்படுத்திக் கொடுக்கிறது.

★ ★

இவை, தேசிய இறைமை, பொருளாதார சுபீட்சம் என்பவற்றுற்காகவும்; சுதந்திரம், சமூக முன்னேற்றம் என்பவற்றிற்காகவும் போராடிவரும் ஆசிய—ஆபிரிக்க மக்கள் பற்றிய சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தினது ஒருசில அம்சங்கள் மட்டுமேயாகும். சோ. சோ. கு. ஒ. வின் சமாதானத்தை நேசிக்கும் கொள்கை உலகெங்கணுமுள்ள லட்சோப லட்சம் மக்களின் நலன்களைப் பேணுவதாக உள்ளது. இது மிகவும் தெளிவான, நம்பிக்கையான சமாதானக் கொள்கையாகும்.

நிக்கலாய் கொஸாகின்
டி. எஸ்ஸி (வரலாறு)

# ஆபிரிக்காவில் முன்னணிக் கட்சிகளின் உருவாக்கம்

அண்மைக் காலத்தில், சோஷலிஸத் திசையமைவை மேற்கொண்டுள்ள நாடுகளில் ஜனநாயகப் புரட்சியாளர்களின் சித்தாந்த அரங்குகளிலும் கட்சி வளர்ச்சியிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மார்க்ஸிய—லெனினிய சித்தாந்தத்தால் வழிநடத்தப்படும் முன்னணிக் கட்சிகள் (அங்கோலா, பெனின், கொங்கோ, மொஸாம்பிக்...) அமைக்கப்படுகின்றன. மார்க்ஸிஸ கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட கட்சியை எதியோப்பிய புரட்சிக்காரர்கள் உருவாக்கி வருகிறார்கள். எதியோப்பிய உழைக்கும் மக்கள் கட்சியை அமைப்பதற்கான கமிஷன் ஒன்று 1979 இறுதியில் நிறுவப்பட்டது.

புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளினதும் ஸ்தாபனங்களினதும் வளர்ச்சியினை ஆராயும்போது இவை முன்னணிக் கட்சிகளாக அபிவிருத்தியுறுதல் பற்றி பல அடிப்படை முடிவுகளுக்கு வரலாம்.

முதலாவதாக உழைக்கும் மக்களின் முன்னணிக் கட்சிகள் உருவாவது தேசிய ஜனநாயகப் புரட்சி அபிவிருத்தியடைவதினதும், வர்க்க நிலைபாடுகள் வலுப்படுவதினதும், முற்போக்குச் சக்திகளின் சித்தாந்த அடித்தளம் விஞ்ஞான சோஷலிஸத்தின் அடிப்படையில் சக்திப்படுவதினதும் இயல்பான வளர்ச்சிப் போக்காகும். முன்னணிக் கட்சிகளின் தோற்றம் சோஷலிஸத் திசையமைவு நாடுகளின் ஜனநாயக முன்னணிகளில் தொழிலாளி வர்க்கம் பாரிய பாத்திரத்தை வகிக்க வழி சமைத்துள்ளது, இது புரட்சிகர ஜனநாயகத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது.

இந்தக் கட்சிகளினது வளர்ச்சிப் போக்குகள், இவற்றின் ஸ்தாபன—சித்தாந்த நிலைபாடுகள் பல்வேறு கட்டங்களில் பெருவாரி பிரச்னைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் முகம் கொடுக்கின்றன. எனினும் அனைத்து புரட்சிகர ஜனநாயகவாதிகளினதும் பொது அம்சம் இவர்கள் தமது கட்சிகளின் சமூக கூட்டமைப்பை மாற்ற விழைவதாகும்;

தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர அறிவாளிகள் மத்தியிலிருந்து உறுப்பினர்களைப் பெருமளவில் சேர்த்துக் கொள்வதற்கே அழுத்தம் கொடுக்கப்படுகிறது. முன்னணிக் கட்சிகளின் சித்தாந்த அடித்தளமாக மார்க்ஸிய லெனினியமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. கட்சி இயக்கத்தின் அடிப்படையாக ஜனநாயக மத்தியத்துவம் உள்ளது. கட்சி பிரதேச—உற்பத்திக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஸ்தாபிக்கப்படுகிறது. கட்சி உறுப்பினர் கட்சியின் வேலைத் திட்டத்தையும் நோக்கங்களையும் அங்கீகரிப்பதுடன், அவற்றைச் செயற்படுத்த உழைக்கவேண்டும். புரட்சிகர ஒழுங்கைப் பேணவேண்டும் உயர் பிரக்ஞையை வெளிப்படுத்துவதுடன் தன் சொந்த நலனைச் சமுதாயத்தின் நலனுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும்.

கட்சியின் உயர் அலுவலர்களுக்கு கூடுதல் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இவர்கள் தொழிலாளர், விவசாயிகள், புரட்சிகர அறிவாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். கம்பனிகளை சொந்தமாக வைத்திருக்கவோ அல்லது அவற்றில் பங்குகளை வாங்கவோ கூடாது, தனியார் கம்பனிகளின் சபைகளில் அங்கம் வகிக்கப்படாது, ஒன்றுக்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறலாகாது, வாடகைக்குக் கொடுக்கப்படும் வீடுகளின் சொந்தக்காரர்களாக இருக்கப்படாது. இவையும் மற்றும் நிபந்தனைகளும் இக் கட்சிகள் பாட்டாளி வர்க்க திசையமைவைப் பெற்றுவருவதைக் குறிக்கின்றன.

முன்னணிக் கட்சிகள் ஸ்தாபிதமாவது புரட்சிகர ஜனநாயகத்தில் இடதுசாரி, மார்க்ஸிஸ சக்திகள் வலுப்பட்டு வருவதையே எடுத்துக் காட்டுகிறது. மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்தத்தால் வழி நடத்தப்படும் உழைக்கும் மக்களின் முன்னணிக் கட்சியின் மூலமே ஆளும் கட்சியால் தலையாய சமூக சக்தியாக மாறமுடியும் என்று இதன் தலைவர்கள் கருதுகிறார்கள்.

## பிரச்னைகளும் தடங்கல்களும்

இன்றைய புரட்சிகர ஜனநாயக கட்சிகளின் வளர்ச்சிப் போக்கை மதிப்பீடு செய்யும்போது மொங்கோலிய மக்கள் புரட்சிக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சியாக மாறுவதற்குள்ள சாத்தியப்பாடுகள் பற்றி லெனின் கூறியவை மனம்கொள்ளத் தக்கனவாகும். மொங்கோலிய மக்கள் குடியரசினது தூதுக் குழுவினருடன் 1921 இல் நடத்திய சம்பாஷணையின்போது லெனின் பின்வருமாறு கூறினார்; "ஒரு கட்சியை இன்னொரு கட்சியாக மாற்றமுடியாது... கால்நடை வளர்ப்பு பிரிவினர் பாட்டாளி வர்க்க வெகு

ஜனங்களாக மாறுவதற்கு புரட்சிக்காரர்கள் ராஜ்ய, பொருளாதார, கலாசார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதில் பாரிய பணிகளை ஆற்றவேண்டும், இது மக்கள் புரட்சிக் கட்சியை கம்யூனிஸ்ட் கட்சியாக மாற்றுவதற்கு இறுதியில் உதவலாம்''1.ராஜ்ய, பொருளாதார, கலாசார வளர்ச்சியுடனும் பாட்டாளி வர்க்கத்தின் முக்கியத்துவம் அதிகரிப்பதுடனும் தான் கட்சியின் மாற்றம் சாத்தியம் என்று லெனின் கருதினார்.

உண்மையான மார்க்ஸிஸ—லெனினிஸ கட்சிகளின் தோற்றம் இவை பாட்டாளி வர்க்க மயமாவதுடன் இணைந்துள்ளது. பாட்டாளி வர்க்க மயப்படுதல் வளர்முக நாடுகளில் நீண்ட நெடுங்காலத்து நிகழ்வுப் போக்கு எனக் கொள்ளத் தேவையில்லை. பிரதானமானது புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளின் கொள்கையில் செல்வாக்கை வகிக்கும் பிரக்ஞை பூர்வமான பாட்டாளி வர்க்க கேந்திரக் குழுவை உருவாக்குவதாகும்.

கலோனியல் எதிர்ப்புப் போராட்ட காலகட்டத்தில் வெகுஜன அரசியல் ஸ்தாபனங்களில் அடிப்படை மாற்றங் களை ஏற்படுத்த வலதுசாரி சக்திகள் கடும் எதிர்ப்பை முறியடிப்பது அவசியமாகும். இது தவிர்க்கப்படமுடியாது வர்க்கப் போராட்டம் கூர்மைப்படுவதற்கும், புரட்சிகர ஜனநாயகத்தை அரசியல் ரீதியில் புனர்வரையறுப்பதற்கும் இட்டுச் செல்கிறது.

கட்சி வளர்ச்சியில் வர்க்க அணுகுதல் முறையின் முக்கியத்துவத்தை சில புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளின் தலைவர்கள் துரதிர்ஷ்டவசமாக இன்னமும் உணரவில்லை. அங்கீகரிக்கப்பட்ட முடிவுகள் எல்லா வேளைகளிலுமே நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஜனநாயக மத்தியத் துவம் சில சமயங்களில் ஒருபக்க மத்தியத்துவத்தால் மாற்றியமைக்கப்பட்டு விடுகிறது. கட்சி ஜனநாயகம் சில வேளைகளில் மீறப்படுகிறது. இவை அனைத்தும் இக்கட்சி கள் புரட்சியின் முன்னணிப் படையாக மாறுவதற்குத் தடங்கலாக உள்ளன.

கட்சியின் அங்கத்துவத் தொகை குறைக்கப்படுவது டன் இந்த நிகழ்வுப்போக்கு முழுமைபெறவில்லை. இது கட்சியின் குணாம்சரீதியான, சமூக ரீதியான இயல்பை நிர்ணயிப்பதில் முக்கியத்துவம் வகிக்கிறது என்பது வாஸ் தவம்தான். ஆகவேதான் கட்சி உறுப்பினர்கள்மீது, குறிப் பாகத் தலைமை உறுப்பினர்கள் மீது கூடுதல் சித்தாந்த— அரசியல் கோரிக்கைகளை முன்வைப்பது ஒரு அவசியமான தேவையாகிறது. தொழிலாளி வர்க்கத்தினதும், அனைத்து

---

1 வி: ஐ: லெனின், திரட்டு நூல்கள், பா: 42, பக்: 361

மக்களினதும் நலன்களை கவனத்திற் கெடுத்துக் கொள்ளும் அரசியல் மார்க்கம் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளால் கடந்த சில ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட வேலைத்திட்ட தஸ்தாவேஜுகளில் தனிநபர் செல்வாக்கு குறைந்து கூட்டு முயற்சிகள் மேலோங்கியிருப்பது பெரும் சித்தாந்த—ஸ்தாபன முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது புரட்சிகர ஜனநாயக சக்திகள் முதிர்ச்சியடைந்து வருவதைச் சுட்டுகிறது.

## சோ. க. க. வுடன் தொடர்புகள்

சோஷலிஸ நாடுகளின் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளுடன், குறிப்பாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புகள் விரிவடைவது புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் விஞ்ஞான சோஷலிஸத்தை நடைமுறையில் கிரகித்துச் செயல்படுத்த பெரிதும் உதவியாக இருக்கும். புதிய சமுதாயத்தை நிர்மாணிப்பதில் பரந்துபட்ட வெகுஜனங்களை ஈர்த்து ஈடுபடுத்திய பாரிய அனுபவங்களை புரட்சிகர ஜனநாயகவாதிகள் பயன்படுத்த இது உதவும்.

அண்மைக் காலத்தில் ஆபிரிக்க புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் சோ. க. க.வுடன் விரிவான தொடர்புகளைப் பேணி வந்துள்ளன. சோ. க. க. வினதும் ஆபிரிக்கக் கட்சிகளினதும் பிரதிநிதிகள் அடிக்கடி சந்திக்கிறார்கள். இக் கூட்டங்கள் காரியார்த்த பூர்வமான, ஆக்கபூர்வமான சூழலில் நடைபெறுகின்றன.

உலக சோஷலிஸத்தின் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளுடன் புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளின் அரசியல்—சித்தாந்த நெருக்கம் கட்சி—அரசாங்கத் தூதுக் குழுக்களின் பரஸ்பர விஜயங்களிலும், கட்சிக் காங்கிரஸ்களில் இவை கலந்து கொள்வதிலும், ராஜ்ய—பொது நிகழ்வுகளில் பங்கு கொள்வதிலும் சமூக—அரசியல் வாழ்வின் பல்வேறு துறைகளில் பெறப்பட்ட அனுபவங்களைப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதிலும், உலகப் புரட்சிகர இயக்கத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதிலும், சர்வதேச ஜனநாயக ஸ்தாபனங்களில் செயற்பாடுகளை இணைப்பதிலும், கட்சி ஊழியர்களையும் ராஜ்ய அலுவலர்களையும் பயிற்றுவிப்பதிலும் வெளிப்பாடு பெறுகிறது.

உதாரணத்திற்கு சோ. க. க.வும் எம். பி.எல். ஏ.யும் (அங்கோலா தொழிற்கட்சி) செய்து கொண்ட ஒத்துழைப்பு உடன்படிக்கையில் சோவியத்—அங்கோலா உறவுகளின் அடிப்படையாக கட்சிகளுக்கிடையிலான உறவு குறிப்பிடப்

படுகிறது. எல்லா மட்டங்களிலும் கட்சித் தொடர்புகளை விஸ்தரிக்கவும், கட்சிப்பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், கட்சி ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதில் ஒத்துழைக்கவும் இது வகை செய்துள்ளது. நவீன சமூக வளர்ச்சிப் பிரச்னைகள் பற்றி கூட்டான ஆய்வுகளை நடத்தவும் இது வழி சமைத்துள்ளது.

சோவியத் யூனியனும் அங்கோலா, மொஸாம்பிக், எதியோப்பியா ஆகிய நாடுகளும் செய்து கொண்டுள்ள நட்புறவு, ஒத்துழைப்பு உடன் படிக்கைகள் இந்நாடுகளின் ஆளும் கட்சிகளுக்கும் மக்களுக்குமிடையில் நெருங்கிய நட்புறவும் ஒத்துழைப்பும் பல்கிப் பெருக உறுதியான அடித்தளத்தை உருவாக்கியுள்ளன. ஏகாதிபத்தியத்தை எதிர்த்த—தேசிய விமோசனத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்குமான போராட்டத்தில் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் இவை வகைசெய்கின்றன.

★ ★

விடுதலையுற்ற நாடுகளில் முன்னணிக் கட்சிகளை உருவாக்குவது காலத்தின் தேவையை பிரதிபலிபதுடன் ஆக்கபூர்வமானது. இது சோஷலிஸத் திசையமைவின் அவசியத் தேவைப்பாடாகும். இவற்றின் வளர்ச்சிப்போக்குகள் இவை மார்க்ஸிய—லெனினியக் கட்சிகளாக முன்னேறுவதைக் குறிக்கின்றன.

எல். கொர்னயேவ்
விஞ். வேட் (வரலாறு)

# நியாயத்துக்காகப் போராடும் பலஸ்தீனம்

பலஸ்தீன விடுதலை இயக்கத்தினால் (பி எல் ஓ) வெளியிடப்படும் இருவார சஞ்சிகையான ''பலஸ்தீனம்,'' இஸ்ரேல் கைப்பற்றிய அரபு பூமியில் பலஸ்தீன கொரில்லா வீரர்களின் போராட்ட நடவடிக்கைகளைப் பற்றி அடிக்கடி எழுதிவருகின்றது.''எங்கள் மண்ணில் ஸியோனிஸ்டுகள் ஒரு போதும் அமைதியைக் காணப்போவதில்லை'' என்று எல்லா பலஸ்தீனர்களின் ஒருமுகப்பட்ட கருத்தையும் அச் சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

பலஸ்தீன புரட்சிச் சக்திகள் தமது முதலாவது போராட்ட நடவடிக்கையை 16 ஆண்டுகளுக்கு முன் 1956 ஜனவரியில் ஆரம்பித்தன இப்போராட்டப் படைகள் அன்று முதலே அனுபவமிக்க, சிறந்த ஆயுதங்களைக் கொண்டனவாகத் திகழ்கின்றன. இப்படைகளின் கொமாண்டராக பலஸ்தீன விடுதலை இயக்க நிர்வாகக் குழுத் தலைவர் யசீர் அரஃபாத் பணியாற்றுகிறார். இவர்கள் ''பலஸ்தீனத்திற்கு விடுதலை'' என்ற சுலோகத்தின் கீழ் போராடுகிறார்கள் அதைச் செயற்படுத்தும்போது அந்தச் சுலோகம் வாழ்வா சாவா என்று நூறாயிரக் கணக்கான பலஸ்தீனர்களை தம் உயிர்களையே தியாகம் செய்யவைத்துள்ளது.

## ஸியோனிஸ தீங்குகள்

ஸியோனிஸத்தின் தந்தையான ரி. ஹெர்ஸல் என்பவர் 100 ஆண்டுகளுக்கு முன் ''துன்புறுத்தப்பட்ட'' யூதர்கள் தமது பூர்வீக பூமியை மீண்டும் பெறுவதற்காக ஒன்றுதிரளவேண்டுமென அவாவுற்றார். ஆனால் நினைவுக் கெட்டா காலம் முதலே பலஸ்தீனம் அரபு மக்களின் நாடாகவே இருந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இங்கிருந்த யூதர்களின் எண்ணிக்கை 8000 பேர்களே. இவர்களும் அந்த நாட்டவர்களல்ல. யூதர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமி என்ற கதை, உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் யூத பணப்பைகளைக் கட்டிக் காப்பதற்கானதோர் அரசியல், இராணுவ தத்துவார்த்த மையமாக இருக்கக் கூடியதாக தமது சொந்த ''இனரீதியில் புனிதமான'' நாட்டை உருவாக்குகின்ற உலக ஸியோனிஸ பூர்ஷ்வாக்களின் நோக்கங்களையும் உள்ளடக்

கியதே. இதைச் செய்வதெப்படி? உள்நாட்டு அரபு மக்களை ஆயுத பலத்தால் விரட்டுவது அல்லது சர்வ நாசம் செய்வது. இதைச் செய்யவே யூதர்கள் எத்தனிக்கின்றனர். இதனுல் ஐ. நா. 1975ல் ஸியோனிசத்தை இனவாதமாகவும், இன ஒதுக்கல் கொள்கையாகவும் கண்டித்துள்ளது.

ஏகாதிபத்தியங்களின் உதவியோடு பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய யூத அரசை நிறுவ எத்தனிக்கப்படுகிறது.

1948 ஏப்ரலில் ஸியோனிஸ கூட்டம் தியர்—யஸின் என்ற அரபு கிராமத்திலுள்ள மக்களைக் கொன்று குவித்தது. அதில் 250 சாதாரண மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்; அதை முன்னின்று நடத்தியவர்தான் இன்றைய இஸ்ரேலிய பிரதமரான மனஹெம் பெகின். வேறு பல அரபுப் பகுதிகளும் இவ்வாறு நாசமாக்கப்பட்டன. இப்போது சுமார் 20 லட்சம் பலஸ்தீனர்கள் நாட்டை விட்டுப் போயுள்ளனர், 1700,000 பேர் இஸ்ரேலிய கைப்பற்றப்பட்ட பகுதியில் அல்லது இஸ்ரேலுக்குள் குரூரமான வாழ்வையே அனுபவிக்கின்றனர். சுமார் 100,000 பலஸ்தீனர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள், நாசப்படுத்தப்பட்டுள்ளார்கள், நாபாம் குண்டினுல் நிர்மூலமாக்கப்பட்டுள்ளார்கள்.

ஸியோனிஸ்டுகளின் கோரத்தாண்டவம் தினந்தோறும் பெருகுகிறது. லெபனுன் கிராமங்கள் நகரங்களில் இஸ்ரேலிய குண்டுகள் மழையெனப் பொழிகின்றன. ஒரு புறத்தில் பலஸ்தீன—இஸ்ரேல் மக்களுக்கிடையே யுத்தம் நடக்கும்போது மறுபுறத்தில் இஸ்ரேலிய பாஸிஸ சார்பு, ஸியோனிஸ ஆட்சிகளுக்கிடையே போர் நிகழ்கிறது.

தனது ''வேதகால எல்லை''களுக்குட்பட்டு யூத தாயகம் என்பதைப் பாதுகாக்கும் கடமையை இஸ்ரேலிய நாடாளுமன்றம் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த எல்லைகளுக்குள் வரும் பிராந்தியங்களெவை? ஸியோனிஸ திட்டங்களுக்கேற்ப 'வேதகால' இஸ்ரேல் என்பது லெபனுன், ஜோர்தான், சிரியா, ஈராக், எகிப்து ஆகிய நாடுகளிலிருந்து கவரப்பட்ட பகுதிகளை உள்ளடக்கியதேயாகும்.

இஸ்ரேலிலும் அது 1967ல் கவர்ந்துகொண்ட நிலங்களிலும் ஸியோனிஸ்டுகள் அரபு மக்களை ''வெளியேற்றும்'' கொள்கையை மேற்கொள்கின்றனர்.

1980ல் சர்வதேச சட்டத்தையே மீறி ஜெருசலம் தனது தலைநகரென இஸ்ரேல் பிரகடனப்படுத்திற்று. அது முஸ்லிம் மக்களை நோக்கிய வீம்புமிக்க அறை கூவலேயாகும்.

# மக்களின் உறுதியை உடைக்க முடியாது

பலஸ்தீன அரபு மக்கள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையில் எதிர்த்துப் போராடுகின்றனர். அம் மக்கள் அவ் இயக்கத்தையே தமது சட்டபூர்வமான பிரதிநிதியாக அங்கீகரித்துள்ளனர்.

தமது நியாயபூர்வமான உரிமைகளை பாதுகாப்பதற்காக பலஸ்தீன அரபுக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்லாண்டுகால போராட்டமானது பலஸ்தீன பிரச்னைக்கு நியாயமான தீர்வுகாணாமல் மத்திய கிழக்கில் தீர்வுக்கு சாத்தியமே இல்லை என்பதையே காட்டுகிறது. இது 1980 ஜுலையில் நடந்த ஐ நா வின் 7வது விசேட கூட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் தேசிய சுதந்திரத்துக்கான மறுக்கமுடியாத உரிமை பலஸ்தீன அரபு மக்களுக்கு உண்டு என 1974ல் ஐ நா நிறைவேற்றிய தீர்மானமும், ஐ நா வில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டதும் இத்தால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சமீப ஆண்டுகளில் ப. வி. இயக்கத்திற்கு உலகளாவிய ஆதரவு கிடைத்துவருகிறது. இன்று சுமார் 100 நாடுகளில் ப. வி. இ. பிரதிநிதிகளுள்ளனர்.

பலஸ்தீனபிரச்சினையால் சோவியத்யூனியன் கோட்பாட்டு ரீதியான, உறுதிமிகு நிலைபாட்டையே கொண்டுள்ளது. தமது சொந்த நாட்டை உரிவாக்கும் உருமையுட்பட பலஸ்தீன அரசு மக்களின் நியாயபூர்வமான உரிமைகளைப்பாதுகாக்கப்படுவதை சோவியத் யூனியன் ஆதரிக்கிறது.

★ ★

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையால் பலஸ்தீன அரசு மக்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்துகின்றனர் என்பது நிதர்சனமானதோர் உண்மையாகும் கவரப்பட்ட எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் இஸ்ரேலிய படைகள் வாபஸான பின்பே, நீண்டகாலமாக துன்புற்றுவரும் பலஸ்தீன மக்கள் தமது நியாயபூர்வமான உரிமைகளைப் பெற்ற பின்னரே மத்திய கிழக்கில் சமாதானமும் பந்தோபஸ்தும் பாதுகாக்கப்பட முடியும்.

(சோவியத் செய்தித்துறை
தகவல்களிலிருந்து)

ஐ. புளாய்

# அமெரிக்காவின் ஏகாதிபத்திய ஆவல்

சோல்ட் i. சோல்ட் ii, ஒப்பந்தங்கள், ஒரு அணுயுத்தத்தை தவிர்க்கின்றன உடன்படிக்கை மற்றும் ஏனைய சோவியத்-அமெரிக்க ஒப்பந்தங்களையெல்லாம்; அடிப்படையான சமத்துவம் மற்றும் சமதையான பந்தோபஸ்து கோட்பாடுகளையெல்லாம் காலால் மிதித்துத் துவம்சம் செய்து கொண்டு அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் சோவியத் யூனியனுக்கு மேலான இராணுவ மேலாதிக்கத்தைப் பிடித்து விட எத்தனிக்கின்றன.

அமெரிக்க அணுச்சக்தி பயமுறுத்தலுக்குஇலக்காக்கி சோவியத் யூனியனை வாஷிங்டன் எவ்வளவு இழிவுபடுத்தினாலும் பரவாயில்லை, ஆனால் அமெரிக்காவின் புனரமைக்கப்பட்ட தந்திரோபாயமானது பல நாடுகளுக்கெதிராக கூர்மைப்பட்டிருப்பதோடு வளர்முக நாடுகளுக்கும் அமெரிக்காவின் அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது.

## வளர்முக நாடுகளுக்கு அச்சுறுத்தல்

கடந்த தசாப்தத்தில் பல வளர்முக நாடுகள் தமது அரசியல் சுதந்திரத்தை பலப்படுத்திக் கொண்டுள்ளதோடு உலக விவகாரங்களில் சமீபத்தில் சுதந்திரமடைந்த நாடுகள் தமது பாத்திரத்தை மேற்கொள்ளக் கூடியதாக அர்த்தமிக்க சமூக மறுமலர்ச்சயயையும் பெற்றுள்ளன என்ற உண்மையைக் கண்டு வாஷிங்டன் வெளிப்படையாகவே ஆத்திரமடைகிறது. எனினும் ஏகாதிபத்தியத்திற்கு இலக்காகிவிடாமல் சர்வதேச உறவுகளில் சுதந்திரமானதும் முக்கியமானதுமாக வளர்முக நாடுகள் திகழ்வதற்கு சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் உயர்த்திப்பிடித்த சமாதான மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக் கொள்கைக்கே நன்றி கூற வேண்டும். முடிவமைதி முன் சென்றதோடு வளர்முக

நாடுகள் ஏகாதிபத்தியத்தை அதன் நிலைபாட்டிலிருந்து படிப்படியாக தள்ளி விட்டன. ஒரு புதிய, நேர்மையான பொருளாதார ஒழுங்கை ஸ்தாபிப்பதற்கான கோரிக்கையில் இது உச்சம் பெற்றது.

ஏகாதிபத்தியக் கொள்கைகளில் வாஷிங்டன் தொங்கிக் கொண்டிருப்பதும், அமெரிக்க அதிகாரத்திற்குள் ஏனைய இறைமையுள்ள நாடுகளை கீழ்ப்படுத்துகின்ற அதன் ஆவலும் சோஷலிஸம் மற்றும் தேசிய விமோசன இயக்க சக்திகளை எதிர்க்கின்ற அதிதீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமெரிக்காவை இட்டுச் சென்றது. பெர்ஸிய குடாவிலுள்ள இராணுவ அதிகாரத்தினூடாக முதலாளித்துவ மேற்கிற்கு மலிவான எண்ணெய் விநியோகத்தை உறுதிசெய்வதாக முன்னாள் ராஜாங்க அமைச்சரான ஹென்றி கிஸிங்கர் அச்சுறுத்தியபோது 1973ல் மேற்கொண்ட அரபு எண்ணெய் தடைக்கான வாஷிங்டனின் பிரதி நடவடிக்கை இதற்குத் தக்க சான்றாகும்.

ஒரு ''புதிய அணுவாயுத தந்திரோபாயத்தை''(ஆணை 59) முன்வைக்கும்போது அமெரிக்க நிர்வாகமானது, தமது வசதிக்கேற்ப சர்வதேசப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணுகின்றதோர் கருவியாகவே தமது அணுவாயுத உற்பத்திச் சாலைகளைச் சுயேச்சையாக பாவிக்கக்கூடிய நிலையில் தாம் இருக்க முடியும் என்ற மாயையான நம்பிக்கையை கைக்கொண்டு வருகிறது. அத்துடன் பொதுமக்களின் நலன்களுக்கு விரோதமாக வாஷிங்டனனது தனது ஆக்கிரமிப்புகர வெளிநாட்டுக் கொள்கைக்குள் வளர்முக நாடுகளை இழுத்துவிடப் பார்க்கிறது; அதாவது அவற்றை தனது அணுவாயுதங்களுக்கு பிணையாக்க எத்தனிக்கின்றது. அணுவாயுத யுத்தத்தை ''ஏற்கும் தன்மை''யையும் அணுவாயுதங்களை ''வரையறுப்புக்குள்ளும்'' ''ஒரு சார்பிலும்'' பாவிப்பதை பற்றியும் பேசும் அதேவேளையில் அமெரிக்க தந்திரோபாயவாதிகள் தமது பயமுறுத்தலை பென்டகனின் அணுவாயுதத் தளங்களாகியுள்ள ஏனைய நாடுகளுக்கு அமெரிக்க பிராந்தியத்திலிருந்து மாற்றவே விரும்புகின்றனர். இது, அமெரிக்க ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ள, புதிய ஏவுகணைகளை நிறுவ திட்டமிடப்பட்டுள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரைப்பகுதி அமெரிக்க அணுவாயுதங்களே அமெரிக்க பிராந்தியத்தில் குவிக்கப்பட்டுள்ளன. ஏனையவை அமெரிக்காவின் வெளிநாட்டுத் தளங்களிலேயே நிறுத்தப்பட்டுள்ளன. புள்ளிவிபரங்களின்படி 1700 அணுவாயுத வெடிக்கலங்கள் தென்கொரியா, பிலிப்பைன் தீவுகள், மற்றும் ஆசிய நாடுகளில் நிறுத்தப்பட்டுள்ளன. அமெரிக்க கடற்படையில் 2500 அணுக்குண்டுகளும் வெடிக்கலங்களும் யுத்த கப்பல்களில் பொருத்தப்பட்டுள்ளன. இக்கப்பல்கள் பசுபிக், இந்து சமுத்திரங்களிலேயே இருக்கின்றன.

# வாஷிங்டனின் அணுவாயுத சூரத்தனம்

வாஷிங்டன் திட்டமிட்டுள்ள ஆக்கிரமிப்புகர இராணுவ-அரசியல் போக்கானது வெளிநாடுகளில் அமெரிக்காவின் இராணுவ நிலைகொள்ளலை அதிகமாக ஏற்படுத்தியுள்ளது. இந்து சமுத்திரம், மத்திய கிழக்கு, ஆபிரிக்காவிலெல்லாம் புதிய அமெரிக்க விமான மற்றும் கடற்படைத் தளங்கள் கட்டப்படுவதே இதற்குத் தக்க உதாரணமாகும்.

இராணுவத் தளங்கள் கட்டப்படுவது தவிர பல ஆசிய ஆபிரிக்க நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் அமெரிக்காவின் அண்டவெளி பரிவத்தனை நிலையங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, அத்தளங்களின் நோக்கமே அணுவாயுத நீர்மூழ்கி தாக்குதல், கம்பியூட்டர் உளவு நிலையங்களை நடத்துவதே.

அணு மற்றும் அணுவற்ற ஆயுதப் பிரயோகங்களைத் தவிர்க்கும் பிரேரணையை சோவியத் யூனியன் முன்வைத்தாலும் அதை அமெரிக்கா நிராகரித்தது. அத்துடன் அணுவாயுத தயாரிப்பை நிராகரிக்கின்ற, உருவாக்கமறுக்கின்ற மற்றும் தமது பிரதேசத்தில் வைத்திருக்காத நாடுகளுக் கெதிராக தான் அணுவாயுதங்களைப் பாவிப்பதில்லை என்றும் சோவியத் யூனியன் குறிப்பிட்டுள்ளது.

''அமெரிக்காவின் முன்செல்லல் அமைப்புகள்'' சோவியத் யூனியனுக்கெதிராக கூர்மைபடுத்தப்பட்டனவேயானாலும், வாஷிங்டனின் தந்திரோபாயவாதிகளின் தர்க்கங்களின்படி, அவை வளர்முக நாடுகளுக்கெதிரான நடவடிக்கைகளுக்கான விரைவு தளங்களாகவே அதிகரித்துவருகின்றன. உதாரணமாக தூர, மத்திய கிழக்கு மற்றும் பெர்ஸிய குடா பிராந்தியங்கள் தமது ''பாரிய நலன்களுக்''கான பகுதிகளென வாஷிங்டன் நிர்வாகம் கூறுவதோடு அப்பகுதிகளையெல்லாம் அணுவாயுதங்களுட்பட ஆயுத பலத்தைப் பிரயோகித்து ''பாதுகாக்க'' முனைகின்றது.

வியத்நாமில் பெற்ற பாடங்களையே மறுதலிக்கின்றன அமெரிக்க அரசியல்வாதிகள் இராணுவ சாதனங்களின் மூலம் மீண்டும் உலக வளர்ச்சிப் போக்குகளில் செல்வாக்கு செலுத்த விரும்புகின்றனர். அமெரிக்க நிர்வாகமானது வெளிப்படையாகவே ஈரானின் உள்விவகாரங்களில் தலையிடுவதோடு ஆப்கானிஸ்தானுக்கெதிராக பிரகடனப்படுத்தாத போரையும் தொடுத்துள்ளது. இந்துமா சமுத்திரத்தில் அமெரிக்க இராணுவத்தின் நடமாட்டம் அப்பிராந்திய நாடுகளுக்கே ஒரு அச்சுத்றுதலாயிருக்கிறது. அவ்வித நிலைமைகளில் அணுவாயுதங்களை அனுமதிப்பது மாபெரும் குற்றமேயாகும் என்பதே உலக அபிப்பிராயமாயிருக்கிறது. ஹிரோஷிமோ, நாகஸாகியில் நடந்த கோரத்தாண்டத்தை நினைக்கும்போது உலகின் பெரும்பாலான மக்கள் வசதியும் வளர்முக நாடுகளுள்ள பிராந்தியங்களில்

அணுவாயுதங்களுக்கு ''கட்டுப்பாடு'' விதிப்பது இன்றியமையாததே.

## மக்களின் அபிலாஷைகளுக்கெதிராக

அமெரிக்காவின் ''புதிய அணுவாயுத தந்திரோபாயம்'' வளர்முக நாடுகளின் மக்கள் தம் அபிலாஷைகளுக்கெதிரானதாகவேயிருக்கிறது. அது சர்வதேச சூழலை நச்சுப்படுத்துவதோடு யுத்த கொதிகளங்களை ஒழிப்பதையும் தடுக்கிறது. வெள்ளை மாளிகையின் இன்றைய அணுவாயுத கொள்கை வளர்முக நாடுகளை ஆயுதப் போட்டிக்குள் வீழ்த்துவதாயுமிருக்கிறது. இதனால் அந்நாடுகளின் சமூக—பொருளாதார நிலைமையே பாதிப்படையும்.

ஆயுதப் போட்டியைக் குறைப்பதும், ஒழிப்பதும் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாயிருக்கும் என்பதையே அமெரிக்காவின் நடவடிக்கைகள் தகர்ப்பதாயிருக்கின்றன.

சர்வ வியாபக சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் பேணுவதும் முடிவமைதியைப் பாதுகாப்பதும், விடுதலையுற்ற நாடுகளின் சமூக— முன்னேற்றத்தை முடுக்குவதுஉட்பட உலக பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு அத்தியாவசிமானதாகும்.

அணு ஏவுகணைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென சோவியத் யூனியன் மீண்டும் மீண்டும் பிரகடனப்படுத்துவதோடு ஒரு அணுவாயுதப் போர் அச்சத்தைத் தவிர்ப்பதற்கும் மனப்பூர்மாகப் பாடுபடுகிறது. அது மிக நேர்மையானதும் கோட்பாட்டு ரீதியானதுமான கொள்கையாயிருக்கிறது. எனவேதான் சோ. க. க. மத்திய கமிட்டி பொதுச் செயலாளரும் சோ. சோ. கு. ஒ. சுப்ரீம் சோவியத் தலைமைக் குழு தலைவருமான லியோனித் பிரெஷ்னேவ் இவ்வாறு சம்பத்தில் குறிப்பிட்டார்:''நாங்கள் வேறெவரின் நிலங்களுக்கும் ஆசைப்படவில்லை. நாம் எவரின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடவில்லை. ஆனல் எப்போதும் எமது உரிமைகளையும் நியாயபூர்வமான நலன்களையும் தூக்கிப்பிடிப்போம்''.

சமாதான சகவாழ்வு, முடிவமைதி, அணுவாயுத கட்டுப்பாட்டைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்த எப்போதும் தயாராயிருப்பது ஆகிய கொள்கைகளோடு சோவியத் யூனியனது உலக மக்களனைவர்க்குமே வாஷிங்டனின் தற்போதைய அணுவாயுதக் கொள்கை அச்சுறுதலாயிருக்கிறதென அதை எதிர்த்து நிற்கிறது. சமாதானத்தை நிலைநிறுத்தவும் உலகின் முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும் இதுவே ஒரேயொரு அறிவார்ந்த மார்க்கமாகும்.

அலக்ஸி கிவா
டி. எஸ்ஸி (வரலாறு)

# ஏகாதிபத்தியமும் சோஷலிஸத் திசையமைவு நாடுகளும்

கடந்த சில ஆண்டுகளில் சோஷலிஸத் திசையமைவு நாடுகள் கூர்மையான அரசியல்—சித்தாந்தப் போராட்டத்திற்கு இலக்காக்கப்பட்டுள்ளன. சோஷலிஸத் திசையமைவின் தத்துவமும் நடைமுறையுமே தாக்குதலுக்கான பொருட்களாகும். முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதைக்கு பூர்ஷ்வா—லிபரல் வலதுசாரி சீர்திருத்தவாதிகள் மாற்று வழிகளை முன்வைக்கிறார்கள்.

ஏகாதிகத்திபத்தின் கொள்கையைப் பொறுத்தவரை முன்னாள் காலனிகளையும் அரை காலனிகளையும் உலக முதலாளித்துவ அமைப்பு வட்டத்திற்குள் வைத்திருக்க அது முனைவது இயல்பானதே. எனினும் பல வளர்முக நாடுகள் சோஷலிஸத் திசையமைவுப் பாதையை மேற்கொள்வது இத்திட்டம் நிறை வேறுவதற்கு முட்டுக் கட்டையாக உள்ளது. இதனால்தான் சோஷலிஸத் திசையமைவை மேற்கொண்டுள்ள நாடுகள் ஏகாதிபத்தியத்தின் சதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் இலக்காகப்படுகின்றன.

## ஏகாதிபத்தியத்தின் நோக்கங்கள்

சோஷலிஸ திசையமைவைக் கொண்ட நாடுகளை எதிர்த்த ஏகாதிபத்தியத்தினது போராட்டம் பல நோக்கங்களை உடையதாகும். முதலாவதாக முதலாளித்துவ வளர்ச்சிப்பாதைக்கு ஒரு மாற்றான சோஷலிஸத் திசையமைவுக் கருத்தை அபகீர்த்திக்குள்ளாக்க அது விழைகிறது. வேறுவார்த்தையில் முதலாளித்துமற்ற வளர்ச்சிப் பாதை பற்றிய மார்க்ஸிய—லெனினியத் தத்துவத்தையும் நடைமுறையையும் மறுக்க எத்தனிக்கப்படுகிறது ஆனால் இக் கருத்தின் பிசகின்மையை சோஷலிஸத் திசையமைவு நாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருவது ஊர்ஜிதம் செய்கிறது. இரண்டாவதாக, தேசியவிமோசனப் பிராந்தியத்தில் சோஷலிஸக் கருத்துருவத்தை சிதறடிக்கவும், இவை இந் நாடுகளின் நிலைமைகளுக்கு உகந்தனவல்ல என

நிறுவவும், வளர்முக நாடுகளில் உண்மையான சோஷலிஸத்தின் செல்வாக்குக்குக் குழிபறிக்கவும் ஏகாதிபத்தியவாதிகள் முனைகிறார்கள். மூன்றாவதாக, சோஷலிஸ திசையமைவு நாடுகளில் ஏகாதிபத்திய விரோத—காலோனியலிஸ விரோத கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிக்கும் தேசிய விமோசன இயக்கத்தின் வளர்ச்சியுற்ற பிரிவுகளை முறியடிக்க ஏகாதிபத்தியவாதிகள் முயன்று வருகிறார்கள். நான்காவதாக, வளர்முக நாடுகளுக்கும் உண்மையான சோஷலிஸத்தின் நாடுகளுக்கு மிடையிலான உறவுகளை பலவீனப்படுத்த ஏகாதிபத்தியவாதிகள் முனைந்து நிற்கிறார்கள்.

வளர்முக நாடுகள் குறித்த ஏகாதிபத்திய கொள்கை புதிதாக ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு ஏற்ப புதிய உபாயங்களாலும் முறைகளாலும் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது.

முதலில் சோஷலிஸத் திசையமைவுத் தோற்றப்பாட்டை ஏகாதிபத்தியவாதிகள் பாரதூரமாகக் கருதவில்லை. சில நாடுகளே சோஷலிஸத் தெரிவை மேற் கொண்டன; தமது உத்யோகபூர்வமான சித்தாந்தம் ''தேசிய வடிவ''—'ஆபிரிக்க' அல்லது 'அராப்' சோஷலிஸம் எனப் பிரகடனப்படுத்தின. ''தேசிய சோஷலிஸம்'' முன்னாள் காலனிகளின் முதலாளித்துவ வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக இராது என்றே ஏகாதபத்தியவாதிகள். ஆரம்பத்தில் கருதினர்.

ஆனால் படிப்படியாக சோஷலிஸத் திசையமைவு பற்றிய முதலாளித்துவ வல்லரசுகளின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது, வலுவுற்று வந்த இப் புதிய சமூகத் தோற்றப்பாடு மேலும் பலரின் ஆதரவைப் பெற்றது. ''தேசிய சோஷலிஸ''த்திற்குப் பதிலாக விஞ்ஞான சோஷலிஸம் உத்தியோக பூர்வமான அரச சித்தாந்தமாகப் பிரகடனப்படுத்தப்படலாயிற்று. புதிதாக விடுதலையுற்ற நாடுகள் பலவும் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதையை மேற்கொண்டுள்ள நாடுகளுடன் ஒன்றுதிரள ஆரம்பித்ததுடன், ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையை முனைப்பாகப் பின்பற்றின. சோஷலிஸத்திசையமைவு நாடுகள் சோவியத் யூனியனுடனும் ஏனைய சோஷலிஸ நாடுகளுடனும் நெருங்கிய நட்புறவைவளர்க்க ஆரம்பித்தமை ஏகாதிபத்தியவாதிகளைக் கவலை கொள்ளச் செய்தது, இது விடுதலையடைந்த நாடுகள் முதலாளித்துவ மேற்கில் தங்கியிருக்கும் நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்தது, ஏகாதிபத்தியத் தாக்குதலிலிருந்தும், அதன் 'போர்ப்படகு'' ராஜ தந்திரத்திற்கும் முன்னால் இந் நாடுகள் தொடர்ந்தும் தற்காப்பற்ற நிலையில் இருக்கவில்லை.

சோஷலிஸத் திசையமைவு ஒரு தற்காலிகத் தோற்றப்பாடல்ல, மாறாக அதற்கு நல்ல எதிர்காலம் உள்ளது

என்ற உண்மை இதன் மீது ஏகாதிபத்தியத்தின் சீற்றத்தை ஏற்படுத்தியது. இந்தக் குரோதம் பல்வேறு வடிவங்களில் வெளிப்பாடு பெற்றது. நிர்ப்பந்தம், உதவிகள் நிறுத்தல், சீர்குலைவு நடவடிக்கைகள், ராணுவச் சதிகள் ஆகியன இவற்றுள் முதன்ம இடத்தைப் பெற்றன. நுகுருமா அரசுக்கு எதிரான சதியில் சி.ஐ. ஏ. வகித்த மூர்க்கத்தனமான பாத்திரம் உலகறிந்ததே. கானவை நிலைகுலையச் செய்ய மேற்கத்திய ஏகபோகங்கள் கானவின் பிரதான ஏற்றுமதிப் பொருளான கொக்கோவின் விலையை உலக முதலாளித்துவச் சந்தையில் திட்டமிட்டு குறைத்தது உட்பட பல நாசகார நடவடிக்கைகளை மேற்கொண்டன. பொருளாதார தடை உட்பட கினியா குடியரசின் குரல் வளையை நசுக்கும் பல நடடிவக்கைகளை பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் எடுத்தனர். முதலாளித்துவப் பாதையைப் பின்பற்ற மறுத்த பல இளம் நாடுகளின் முற்போக்கு அரசாங்கங்கள் ஏகாதிபத்தியச் சக்திகள் மூலம் கவிழ்க்கப் பட்டன.

## ஏகாதிபத்தியம் உபாயத்தை மாற்றுகிறது

சுதந்திரமடைந்த நாடுகள் சோஷலிஸத் திசையமைவை மேற்கொள்வது வலுமிக்க சக்தியாக மாறியிருப்பதால் சோஷலிஸப் பாதையை வளரும் நாடுகள் தெரிவு செய்வதையோ, அவை முதலாளித்துவ விரோதப் போக்கை மேற்கொள்வதையோ பழைய கலோனியல் முறைகளால் தடுக்க முடியாது என்பது ஸ்பஷ்டமாகியுள்ளது. எனினும் சோஷலிஸ எதிர்காலத்தைத் தேர்ந்தெடுப்பதால் மட்டும் வெற்றிகரமான சோஷலித்தைச் சாதித்துவிடமுடியாது. சோஷலிஸப் பாதையில் முன்னேறுவது ஒரு நீண்டகால நிகழ்வாகும், இது முரண்பாடுகள் நிறைந்த ஒன்று, பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டும். ''யார் வெல்வார்கள்'' என்பது நிகழ்ச்சிநிரலில் நீண்டகாலம் இருக்கும். சோஷலிஸ எதிர்ப்புச் சக்திகள் நீண்டகாலம் உயிர்வாழும்.

அத்துடன் முற்போக்கு ஆட்சிகளின் அயல்நாட்டுக் கொள்கை பல்வேறு போக்குகளை வெளிப்படுத்துகிறது. அவை சோஷலிஸ நாடுகளுடனும் முதலாளித்துவ நாடுகளுடனும் உறவுகளைப் பேணுகின்றன.

இதனுல் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதையை மேற்கொண்டுள்ள நாடுகளைப் பொறுத்து ஒரு நெகிழ்வான கொள்கையைப் பின்பற்றுவதென ஏகாதிபத்தியவாதிகள் தீர்மானித்துள்ளனர். இந்நாடுகளில் புரட்சிகர நிகழ்வுகள் ஆழமடைவதைத் தடுக்க முனைகிறுர்கள். இதற்காக இந்நாடுகளிலுள்ள முதலாளித்துவச் சார்புச் சக்திகளை வலுப்படுத்த பல வழிகளிலும் உதவிகளை வழங்குகிறுர்கள்.

சில புரட்சிகர ஜனநாயக நாடுகளைத் தம் பக்கம் இழுக்க ஏகாதிபத்திய வல்லரசுகள் முயற்சி செய்கின்றன.

முற்போக்கு ஆட்சிகளை எதிர்த்த இக்கொள்கையில் முற்போக்கு அரசியல் சக்திகளுக்கிடையில், குறிப்பாக கம்யூனிஸ்டுகளுக்கும் புரட்சிகர ஜனநாயக சக்திகளுக்கு மிடையில் குரோதத்தையும் மோதுதலையும் தூண்டிவிடு வதே பிரதான இடத்தை வகிக்கிறது,

குலரீதியான, மதரீதியான பிணக்குகளை ஏகாதிபத் தியவாதிகள் கூடுதலாகப் பயன்படுத்துகிறார்கள். இதற்கு சமூகத்தின் மிகப் பின்தங்கிய பகுதியினர் மத்தியில் இன, மதவெறியைத் தூண்டிவிடுகிறார்கள். உதாரணத்திற்கு ''முஸ்லிம் சகோதரர்'' இயக்கத்தைக் குறிப்பிடலாம். பல புரட்சிகர ஜனநாயக நாடுகளில் இவர்கள் கொடிய சதிகளை மேற்கொண்டு வருகிறார்கள். சிரியாவில் இவர்களின் சதிநடவடிக்கைகள் 1950இல் உச்சக்கட்டத்தை எட்டியது.

வளர்முக நாடுகளுக்கான பொருளாதார, தொழில் நுட்ப உதவியைப் பொறுத்தும் ஏகாதிபத்தியவாதிகள் தமது தந்திரத்தை மாற்றிக்கொண்டுள்ளனர். முதலாளித் துவமற்ற வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டுள்ள விடு தலையடைந்த நாடுகளுக்கும் முதலாளித்துவ வல்லரசுகள் உதவி வழங்கிவருகின்றன. என்றாலும் இந்த உதவியின் அளவும், அதை வழங்குவதற்கான நிபந்தனைகளும் இவ் வளரும் நாடுகளின் முற்போக்கு ஆட்சிகள் பின்பற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்து வித்தியாசப்படுகின்றது. எவ்வாறாயினும் முற்போக்கு ஆட்சிகளின் உள்நாட்டு, வெளிநாட்டு நடவடிக்கைகளைப் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு கருவி யாகவே இந்த உதவி உபயோகிக்கப்படுகிறது.

## பழைய கொள்கை

தாம் விரும்பாத ஆட்சிகளைப் பொறுத்த தமது பழைய கலோனியலிசக் கொள்கையை ஏகாதிபத்திய வாதிகள் கைவிட்டுவிடவில்லை. முற்போக்கு ஆட்சிகளைக் கவிழ்ப்பதற்கான சதிகளும் ஆயுதத் தலையீடுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. கினியாவிலும் (1970) பெனினிலும் (1977) மற்றும் பல நாடுகளிலும் இவை இடம்பெற்றன. முற்போக்கான சமூகத் திசைய மைவுப் பாதையை கடைப்பிடிக்கும் முற்போக்கு அரசு களின் குணவியல்பை மாற்ற எடுக்கும் சமாதான வழிகளி லான முயற்சிகள் பயனளிக்காதபோதே இம்முறைகள் கையாளப்படுகின்றன.

ஏகாதிபத்தியவாதிகளும் உள்நாட்டுப் பிற்போக்காளர்களும் கட்டவிழ்த்துவிட்ட ஆயுதத்தாக்குதலை எதிர்த்த கடும் போராட்டத்திலேயே சோஷலிஸத் திசையமைவு நாடாக அங்கோலா ஜனித்தது. எதியோப்பியாவிலும் ஏகாதிபத்திய சக்திகள் ஆயுதத்தாக்குதலை நடத்தின. கம்பூச்சியாவையும் அப்கானிஸ்தானையும் எதிர்த்தும் ஏகாதிபத்தியவாதிகள் துரோகத்தனமான கொள்கையையே கடைப்பிடிக்கின்றனர்.

ஆசிய, ஆபிரிக்க முற்போக்கு ஆட்சிகள் சோஷலிஸத் தெரிவை மேற்கொள்வதை ஏகாதிபத்திய நடவடிக்கைகள் சிக்கல்படுத்துகின்றன. சோஷலிஸத் திசையமைவை மேற்கொண்டுள்ள நாடுகள் எதிர்கொள்ளும் பொருளாதாரக் கஷ்டங்களுக்கு இது ஒரு காரணமாகும். எனினும் சோஷலிஸத் திசையமைவை ஒரு சமூக இயக்கமாக முறியடிப்பதில் ஏகாதிபத்தியவாதிகளும் போலிப் புரட்சியாளர்களும் தோல்வியையே கண்டுள்ளனர். சோஷலிஸத் திசையமைவு நாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதும், இவை முற்போக்கான சமூக-பொருளாதார நடவடிக்கைகளை எடுத்துவருவதும், சோஷலிஸ நாடுகளுடன் இவற்றின் ஒத்துழைப்பு வியாபித்துவருவதும் இதை ஊர்ஜிதம் செய்கின்றன.

ஐ. கிறிஷின்

# பணவீக்கம், வருவாய்கள், வேலையில்லாத் திண்டாட்டம்

முதலாளித்துவ உலகில் முதலாளிகளின் லாபமும், பாட்டாளி மக்களுக்கான வாழ்க்கைச் செலவினங்களும் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றன.

## வாழ்க்கை மேலும் 'விலையுயர்ந்ததாகிறது'

எமது நாட்களில் பணவீக்கமானது, வாழ்க்கைச் செலவினங்களினதும், நுகர்ச்சிப் பண்டங்களின் விலைகளினதும் தொடர்ச்சியாக உயர்ந்து செல்லும் தன்மையினுல் தெளிவாக விபரிக்கப்ப கிறது. இவ்வாறே 1977 வரையில் ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு ஆகிய நாடுகளிலுள்ள நுகர்ச்சிப் பண்டங்களின் விலைகள் 1964-1970 காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2.5 மடங்கினுலும், பிரிட்டனில் நான்கு மடங்கினுலும், இத்தாலியில் ஐந்து மடங்கினுலும் அதிகரித்துள்ளது. பலத்த வர்க்கப் போராட்டங்களின் போக்குகளில் உழைக்கும் மக்களால் வென்றெடுக்கப்பட்ட சாதாரண வேதனங்களின் கொள்வனவுத் திறனும் மிகக் கூர்மையாக வீழ்ச்சியடைந்து வருகின்றன.

கடந்து சென்ற ஆண்டுகளின்போது இப்போக்குகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களேதும் இடம்பெறவில்லை. 1970க்களில் மெய்வேதனங்கள் அதற்கு முந்திய தஸாப்தங்களுடன் ஒப்பிடும்போது பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது. இது 1974-1975ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் விளைவாகவே நிகழ்ந்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் மெய்வருமானம் 1973-1975 காலப்பகுதியில் 7சதவீதத்தினுலும், பிரிட்டனின் மெய்வருமானம் 1977ல் 5சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

1970க்களின் ஆரம்பத்திலிருந்து முதலாளித்துவ பொருளாதாரத்தினை ஆட்டங்காணவைத்திருக்கும் சக்தி, நிதி மற்றும் ஏனைய நெருக்கடிகளாலும் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரங்களில் பணவீக்கத்தின் மிக மோச

மான தாக்கம் உயர்வடைந்துசென்றுள்ளது. ஏகபோகங் கள் தமக்குத்தாமே விளைவித்துக்கொண்ட சக்தி, உணவுப் பொருள் பற்றுக்குறைகளைச் சாதகமாக்கிக்கொண்டு குறைந்த, சராசரி வருமானமுள்ள குடும்பங்களில் பெரும் பகுதிச் செலவினங்களை ஏற்படுத்தும் எரிபொருள், சக்தி, உணவுப் பொருட்களின் விலைகளை மேலும் உயர்த்தியுள் ளன. கடந்த தஸாப்தத்தில் பெரும்பாலான முதலாளித் துவ நாடுகள் எரிபொருள், சக்தி, உணவுப்பொருட்கள் என்பவற்றின் விலைகளை ஏனைய நுகர்ச்சிப் பொருட்களின் விலைகளைவிட மிக வேகமாக அதிகரித்துள்ளன.

ஆனால் பொருளாதாரச் சூழ்நிலைகள் மேலும் சாத கமாக இருந்தபோது ஏகபோக லாபங்களைவிட பெறப் பட்ட வருமானங்களின் வளர்ச்சி மிக மந்தமாகவே காணப்பட்டது. உதாரணமாக, 1971லிருந்து 1978 வரை தலையாய ஐக்கிய அமெரிக்க கூட்டிணையனங்களின் மொத்த லாபங்கள் 151 சதவீதத்தினாலும் அதேபோது நிகர லாபங்கள் (வரிகளிற்குப் பின்) 174 சதவீதத்தின லும் அதிகரித்துள்ளன. இதே நேரத்தில் உழைக்கும் மக்க ளின் வாராந்த வேதனங்கள் 61 சதவீதத்தினல் மட்டுமே அதிகரித்துள்ளன. ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் 100 தலை யாய கைத்தொழிற் கம்பனிகளின் நிகர லாபங்கள் 1965-1978 வரையிலான காலப்பகுதியில் 209 சதவீதத்தினல் அதிகரித்துள்ளன. ஆனல் அதேவேளையில் அங்கு பணி யாற்றுவோரின் வேதனங்கள் 144 சதவீதத்தினல் மட்டுமே உயர்வடைந்துள்ளது.

ஏனைய காரணிகளுடன் சேர்ந்து (இவற்றுள் வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் முதலிடத்தைப் பெறு கிறது) வேகமாக உயர்வடையும் விலைகள் உத்தியோக பூர்வமாக நிறுவப்பட்ட வறுமைக் கோட்டின்கீழ் வரு மானம்பெறும் மக்களின் எண்ணிக்கையை மேலும் அதிக ரிக்கச் செய்கின்றது. ஐக்கிய அமெரிக்காவில் 1974-1975 ஆகிய இரு ஆண்டுகளிலும் இவ்வாறானோரின் எண்ணிக்கை 3.8 மில்லியனாகவும், பிரிட்டனில் 1974ம் ஆண்டிலிருந்து 1976ம் ஆண்டுவரை 870,000 ஆகவும் அதிகரித்துள்ளது.

## உழைக்கும் மக்களே உயர்ந்த வரிகளைச் செலுத்துகிறார்கள்

உழைக்கும் மக்கள்மீதான பணவீக்கத்தின் தாக்கம் உயர்வடையும் வாழ்க்கைச் செலவினல் மட்டுமே குறிக்கப் படவில்லை, கணிசமாக அதிகரித்துச் செல்லும் வரிகளுக்கும் இது இட்டுச் செல்கிறது. உழைக்கும் மக்கள் சாதாரண மாகச் செலுத்திவரும் வரிகளுடன் அவர்கள்பெறும் வேத னங்களுக்கும் வரிசெலுத்தப்படவேண்டியுள்ளது. உதாரண

மாக ஐக்கிய அமெரிக்காவில் சாதாரண வருமானங்கள் பத்துவீதமாக அதிகரித்துள்ளபோது வரிகள் 12—18சதவீதமாக அதிகரித்துள்ளன. முன்னர் வரிவிலக்கு எல்லையின் கீழ் வேதனம் பெற்றுவந்த மக்கள் இதன்மூலம் வரிசெலுத்துவோர் குழுவினுள் உள்ளடக்கப்படுகிறார்கள்.

தனியார் கூட்டினையங்களின் வருமானங்கள் பணவீக்கத்தால் வளர்ச்சியடையும் வரிவிதிப்புக்களினால் உண்மையிலேயே பாதிக்கப்படாதிருக்கின்றன. பூர்ஷுவா வர்க்கமான பெரும்புள்ளிகள்கூட வளர்ச்சியடைந்து செல்லும் வரிவிதிப்புக்களினால் அதிகம் பாதிக்கப்படவில்லை குறைந்த, சராசரி வருமானம் பெறுவோருக்கான தனிப்பட்ட வருமான வரிகள் மிக வேகமாக அதிகரித்துள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட குடும்ப வரவுசெலவு ஆய்வுகளின்படி குறைந்த, சராசரி வருமானம் பெறுவோர் ஐக்கிய அமெரிக்க பொருளாதாரத்தின் பிரதான கடனாளிகளாகவும், பெரும் பங்குதாரர்களும், பணக்கார குடும்பத்தினரும் கடன்மூலம் லாபம் பெறுவோராகவும் இருந்து வருகிறார்கள்.

## வேலைவாய்ப்புகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன

முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் பணவீக்கத்திற்கு எதிரான பல நடவடிக்கைகளை எடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன, வியாபார நடவடிக்கைகளைக் குறைக்குமாறு வற்புறுத்துதல் அதிலொன்று, இதிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டம் உதயமாகிறது.

ஆனால் நடைமுறையில் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக வேலைவாய்ப்பினைக் குறைக்கும் செயற்பாடுகள் சாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கவில்லை.

ஒரு புறத்தில், பணவீக்கமானது முதலாளித்துவ நாடுகளில் பொதுவாக நிலவிவரும் பொருளாதார ஸ்திரமின்மையை அதிகரிக்கச் செய்கிறது. குறிப்பாக உற்பத்தியிலும், முதலீடுகளிலும் இது புதிய அசமத்துவத்தைத் தோற்றுவிக்கிறது அத்துடன் நுகர்வோர் கேள்விகளையும் இது நலிவுபடுத்துகிறது. இவை வேலையில்லாத் திண்டாட்டத்தின் வளர்ச்சிக்கு இடமளிக்கின்றன.

மறுபுறத்தில், உழைக்கும் மக்களின் குடும்ப வரவு செலவுத்திட்டத்தில் இவை பொத்தல்களை ஏற்படுத்துவதன் மூலம் பல சிறிய, நடுத்தர விவசாயிகள், தொழிலாளர்கள் குடும்பங்களில் வங்குரோத்துத்தனத்தை உண்டாக்குகின்றன. பணவீக்கம் தொழிலாளர் படை பின்

ஞேக்கிச் செல்லும் வேகத்தைத் துரிதப்படுத்துகிறது. முன்னர் வேலைசெய்யவேண்டியிராத புதிய பிரிவினர்கூட (பெண்கள், குட்டி) பூர்ஷுவாக்கள்) வேலைதேடி ஓடவேண்டிய சூழ்நிலையை இது உருவாக்கியுள்ளது.

வேலையில்லாத் திண்டாட்டம் பணவீக்கத்தின் மீது நேரடியாகத் தங்கியிருக்கும் தன்மையினை இன்று புள்ளி விபரங்கள்கூட எடுத்துக்காட்டுகின்றன. நடைமுறையில் சகல முதலாளித்துவ நாடுகளிலும் 1970க்களின் நடுப் பகுதியிலிருந்து உயர்பணவீக்கம் நிலவிவருகிறது. இதனைத் தொடர்ந்து பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவுகிறது. வேறுவிதமாகக் கூறினுல், விலைகள், வேலை வாய்ப்புகள் என்பனவைபற்றிய அரசு—ஏகபோகத்தின் பாரம்பரிய கொள்கைகள் இன்று முரண்பாட்டுச் சுழற்சியினுள் சிக்கியுள்ளன.

★ ★

இவ்வாறே பூர்ஷுவாப் பொருளியல் நிபுணர்களும், அரசு—ஏகபோக கட்டுப்பாடுகளும் பணவீக்கத்தின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாதனவாகவும், அதனுடைய சமூக, பொருளாதார முக்கியத்துவத்தை ஒரு சிறிதளவேனும் குறைக்கமுடியாதனவாகவும் காணப்படுகின்றன. முதலாளித்துவ சமுதாயத்தின் அபிவிருத்தி ஏழைகளை அதி ஏழைகளாக்கவும், பணக்காரர்களை அதிபணக்காரர்களாக்கவுமே உதவுமென்ற லெனின் உருவாக்கிய சித்தாந்தத்தினை மேற்கூறிய உதாரணங்கள் மேலும் உறுதிசெய்கின்றன. முதலாளித்துவத்தின் கீழ் சொத்துடைமை அசமத்துவம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும்.

மிரோவாயா எக்கனேமிக்கா ஐ மெஷ்துனரோட்னீ
ஒட்னேஷெனியா, இல 7, 1980

பீ. ஷால்திக்

# சுதந்திர உலகில் இளம் மக்களின் தலைவிதி

1978-1979 காலப்பகுதியில் மேற்கின் பெரிய முதலாளித்துவ நாடுகளில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்ட வேலையற்றோர் தொகையில் 40 சத வீதத்தினர் இளைஞர்களாவர். இந்நாடுகளில் பன்னிரண்டு மில்லியனுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலையற்றவர்களாகவோ அல்லது அதனைப்பெறும் சந்தர்ப்பமற்றவர்களாகவோ இருக்கிறார்களென்று தொழிற்சங்கப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

''ஐந்தாண்டுகாலமாக நான் வேலைதேடிக்கொண்டிருக்கிறேன். விரக்தியடையும் சிலபோது ஓடும்காரொன்றின் குறுக்கே பாய்வேன். என்னை வைத்தியசாலையிற் சேர்ப்பார்கள். அங்கு குறைந்தபட்சம் உணவையாவது பெற்றுக்கொள்ளலாம்'' என்று ''எல் அவந்தி'' என்ற செய்திப் பத்திரிகையின் கேள்விக்கொத்தை நிரப்பும்போது 28 வயதான இத்தாலிய இளைஞரொனுவன் குறிப்பிட்டுள்ளான்' இந்த அறிக்கையில் அவன் ''எவ். பீ'' என்று ஒப்பமிட்டுள்ளான்.

## 'மிதமிஞ்சிய' சந்ததி

இளம் மக்களின் வேலையில்லாப் பிரச்னைகள் குறித்து மேற்கத்திய பூர்ஷுவாக்கள் வெறும் பாசாங்கு காட்டுகிறார்கள். சில அரசாங்கங்கள் பொது மக்களின் நிர்ப்பந்தங்காரணமாக ''வேலையில்லாத்திண்டாட்டத்திற்கு முடிவுகட்டும் திட்டங்களை'' அறிவித்துவருகின்றன. ஆனால் நிஜ வாழ்க்கையில் வேலையற்ற இளம் மக்கள் சுரண்டலை அடிப்படையாகக்கொண்ட சமுதாயத்தில் 'மிதமிஞ்சிய' சந்ததியாகவும், 'இழந்துவிட்ட' சமுதாயமாகவும் கருதப்படுகிறார்கள். ஒரு மில்லியனுக்குமேற்பட்ட ஆரோக்கியமான இளைஞர்கள் வேலையற்றிக்கும்போது 1977ல் வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழிக்க இயற்றப்பட்ட சட்டத்திற்கிணங்க 80 ஆயிரம் இத்தாலிய இளைஞர்கள் மட்டுமே வேலைபெறும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளார்களென்று இத்தாலிய வார சஞ்சிகையான ''பனோரமா'' குறிப்பிடுகிறது. பிரிட்டனில் 'உபயோகமான பொதுச்சேவைகள்' என்றழைக்கப்படும் துறையில் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. நடைமுறைரீதியில் இதன் பொருள் சர்வகலாசாலைப்பட்டதாரிகள்; அவர்கள் அதிர்ஷ்டசாலிக

ளாக இருந்தால் சுத்திகரிப்போராக தொழில்வாய்ப்பினைப் பெறும் நம்பிக்கையுண்டு என்பதேயாகும்.

கைத்தொழிற்துறையில் இளம் மக்களுக்கெதிராக பாரபட்சம்காட்டல் மேற்கில் இன்று நடைமுறையிலிருந்து வருகிறது. அவர்கள் வழக்கமாகப்பெறும் குறைந்த வேதனத்திற்காக கடினமான, மிக ஆபத்தான வேலைகளைச் செய்யவேண்டியுள்ளது. பிரிட்டிஷ் இரும்பு, உருக்குத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் பதினைந்தே வயதான ஓர் இளம் தொழிலாளி வளர்ந்தோர் பெறும் வேதனத்தின் மூன்றில் ஒரு பகுதியினையே பெறுகிறான், ஆனால் வளர்ந்த ஒரு தொழிலாளி செய்யும் அதேவேலையினையே இவனும் செய்தாகவேண்டும்; இவ்வாறே பதினாறுவயதான, பத்தொன்பது வயதான தொழிலாளிகள் முறையே வளர்ந்தோர் பெறும் வேதனத்தின் ஐந்தில் இரண்டு பங்கினையே பெறுகிறார்கள்.

முதலாளித்துவ தொழில் வழங்குவோர் வளர்ந்தோர் செய்யும் அதேவேலையை இளைஞர்கள் கூடிய விரைவில் செய்துமுடிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஐக்கிய அமெரிக்காவில் கைத்தொழிற்துறையில் நிகழ்ந்த விபத்துக்களில் சிக்கியோரில் அரைவாசிப்பேர் பதினெட்டு வயதிற்குக்குறைந்த இளைஞர்களேயாவர்.

தமதுவேலையை இழக்கநேரிடுமென்ற பயம் நிரந்தரமாக இருப்பதால் பாதுகாப்புத்தன்மைகுறித்து இளம் மக்கள் அதிக அக்கறைகொள்வதில்லை. 16-24 வயதிற்குட்பட்ட சராசரி இளம் மக்கள் எட்டுமாதங்களுக்கு மேல் ஒரே தொழிலில் நிலைத்திருப்பதில்லை. இதன் பின்னர் இன்னொரு சந்தர்ப்பத்திற்காக நீண்ட, ஆவலான தேடுதல் ஆரம்பமாகிறது.

வழக்கமாக முதலில் வேலையிலிருந்து நீக்கப்படுவோர் இளைஞர்களேயாவர். ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் மிகச் சாதாரணமாக வேலையிலிருந்து நீக்கப்படுவோர் இருபது வயதிற்குற்பட்ட இளைஞர்களேயாவர், முதலாளிகள் அதிகார துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிராக தொழிலாளர்களுக்குப்பாதுகாப்புவழங்கும் சட்டத்திற்குள் இவ்வயதினர் உட்படுத்தப்படவில்லை. ஏனைய முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள இதனையொத்த சட்டங்கள் இளம் தொழிலாளர்களின் பாதுகாப்பு உரிமைகளுக்கு உதட்டளவிலான சேவைகளைச் செய்வதுடன் யதார்த்த வாழ்வில் காத்திரமற்றும் காணப்படுகின்றன.

## கல்வித்துறை நெருக்கடிகள்

1978ம் ஆண்டில் 216 ஆயிரம் வெற்றிடமான வேலைகள் வேலையற்ற இளம் மக்களுக்கு வழங்க மறுக்கப்பட்டன

என்று பிரிட்டனில் பதிவு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இவ்வாறான மறுப்பிற்கான காரணம் அந்த இளம் மக்களின் பொதுக்கல்வித் தராதரம் நவீன கைத்தொழிற்துறையின் தேவைகளுக்கு குறைவாகக் காணப்பட்டமையேயாகும்.

ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகளில் பதினான்கு வயதிற்கு மேற்பட்டோரில் ஒரு விகிதத்தினர் முழுமையான கல்வியறிவற்றோராக் காணப்படுகின்றனர். இருபது லட்சத்து நானூறு ஆயிரம் அமெரிக்கக் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை, அறுபதுலட்சம் குழந்தைகள் முதலாம் ஆண்டுடன் பாடசாலையிலிருந்து விலகிவிடுகின்றன. 1979ம் ஆண்டில் சிரேஷ்ட பாடசாலை மாணவர்களில் 52 சத வீதமானோர் தமது கல்வியினைப் பூரணப்படுத்தவில்லை.

மேற்கத்திய கல்விமுறையில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு இவை உறுதியான சான்றுகளாகும். ஒருவர் தனது கட்டணங்களைப் போதியளவில் செலுத்துவதன்மூலம் பல்கலைக்கழக மட்டத்திலான கல்வியைக்கூட இலகுவிற் பெற்றுவிடலாம். மீண்டும் ஐக்கிய அமெரிக்காவை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம், வருடாந்த கல்விக் கட்டணங்கள் மூவாயிரத்திலிருந்து ஆறாயிரம்வரையில் அங்கு செலுத்தவேண்டியுள்ளது.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பெரும்பான்மையானோராக இருக்கும் தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தோரில் மிகக் குறைவான தொகையினரே பல்கலைக்கழக மாணவர்களாக இருப்பதன் காரணத்தை அந்த அபரிமித கட்டணங்கள் நன்கு விபரிக்கின்றன. இதே நேரத்தில் பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்த, ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த குழந்தைகள் உழைக்கும் வர்க்கத்தைச்சேர்ந்த குழந்தைகளைவிட எண்பது சதவிகிதம் அதிகமான பல்கலைக்கழகக் கல்விக்கான வாய்ப்பினைக்கொண்டுள்ளன.

இதுவே ''சுதந்திர உலகம்'' என்றழைக்கப்படும் பிரதேசங்களில் இளம்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளவாய்ப்பாகும்.

*அஜிரேற்றர், இல, 16, 1980*

## சித்தாந்த அரங்கு

கொன்ஸ்ரான்ரின் சேர்னென்கோ,
அரசியற்குழு உறுப்பினர்.
சோ.க.க. மத்திய கமிட்டிச் செயலாளர்.

# சோ.க.க.வின் சித்தாந்தம் மார்க்ஸிஸ-லெனினிஸமே

புரட்சிகரச் சித்தாந்தமொன்று இல்லாமல் புரட்சிகர இயக்கம் எதுவுமே இருக்கமுடியாதென்பதை கம்யூனிஸ்டுக்கள் நீண்டகாலமாக அறிந்திருக்கிறுகள். ரஷ்யாவில் உண்மையான புரட்சிகரக் கட்சியொன்றினை உருவாக்குவதற்காக லெனின், ''மிக வளர்ச்சியடைந்த சிந்தாந்தமொன்றினால் வழிநடாத்தப்படும் கட்சியினால் மட்டுமே முன்னணிப் போராளியின் பாத்திரத்தைப் பூரணப்படுத்த முடியும்''1 என்ற கோட்பாட்டினைக் கடைப்பிடித்தார். சமுதாயத்தின் அபிவிருத்தி, இயற்கை, மனிதச் சிந்தனைகள் என்பவற்றை ஆளும் விதிகள், சுரண்டல் முறையினை புரட்சிகரமாக தூக்கிவீசும் மார்க்கங்கள், சோஷலிஸத்தின் உருவாக்கம் என்பவற்றை தத்துவார்த்த, பொருளாதார அரசியல் நோக்கில் தர்க்கித்துப் பெறப்பட்ட அற்புதமான வழிமுறையே இதுவாகும். இந்நோக்குகளே பாட்டாளி வர்க்கம், அதனுடைய முன்னணிப்படையாகிய கம்யூனிஸ்ட் கட்சி என்பவைபற்றிய உலக அபிப்பிராயங்களைத் தோற்றுவிக்கின்றன.

மக்களின் மனங்களிளும், சமூக அபிவிருத்தியிலும் பெரும் செல்வாக்கினைப் பெற்ற, தனது ஆதரவாளர்களினுல் மட்டுமின்றி எதிரிகளினுற்கூட அங்கீகரிக்கப்பட்ட மார்க்ஸிஸ—லெனினிஸத்தை அண்மையில் சென்று நோக்குவோம்.

## மூன்று அம்ச உறுப்புக்கள்

1840க்களில் நிலவிய பிரச்னைகளுக்கும், மக்களின் வாழ்க்கையை மேலும் சிறப்பிக்கத்தக்க மார்க்கங்கள் பற்றிய பிரச்னைகளுக்கும் தீர்வு வழங்கத்தக்க சமூகவியற்

---

1 வி.இ. லெனின், திரட்டு நூல்கள், பாகம் 5, பக்கம் 370

சித்தாந்தமொன்றே அக்காலத்திய சமூக அபிவிருத்திக்கான அவசிய தேவைப்பாடாக இருந்தது. வரலாற்று ரீதியான இச்செயற்பாடு கார்ல் மாக்ஸினுலும் அவருடைய சகாவான பிரடெரிக் ஏங்கல்ஸினுலும் தீர்த்துவைக்கப்பட்டு, அண்மைக்கால விஞ்ஞான சாதனைகளையும், 19ம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் நிகழ்வுற்ற வர்க்கப் போராட்டங்களின் அனுபவங்களையும் பொதுமைமைப்படுத்திய விளாதிமிர் லெனினுல் ஆக்கபூர்வமாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

சகல மட்டங்களிலும் இருந்த கம்யூனிஸ விரோதிகள் மார்க்ஸிஸ—லெனினிஸத்தினை ஒரு பொய்யான கற்பனை வடிவாகவே கருதிஞர்கள். ஆனுல் யதார்த்த வடிவிலோ அது தொடர்ந்து வந்த சமூகச் சிந்தனைகளின் சாதனைகளது அபிவிருத்தியின் நேரடித் தோற்றமாக இருந்தது. முன்னர் இருந்த சமுதாயச் சித்தாந்தங்களைப் போலன்றி மார்க்ஸிஸமானது உலகினை விஞ்ஞான பூர்வமாக விபரிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் அதனைப் புனரமைப்பதற்கான பாதையினையும் காட்டுகிறது. மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்த முறையானது மூன்று பிரதான அம்ச உறுப்புகளை உள்ளடக்கியுள்ளது: தத்துவம், அரசியற் பொருளாதாரம், விஞ்ஞான சோஷலிஸம்.

தத்துவமானது (இயக்கவியல், வரலாற்றுப் பொருள் முதல் வாதம்) இயற்கையினதும், சமுதாயத்தினதும் அபிவிருத்திபற்றிய பொது விதிகளையும், மனித சிந்தனைகள் பற்றிய விதிகளையும். மாற்றங்களின் வழிமுறையையும் ஆராய்கிறது. இயற்கை, சமுதாயம் என்பவை பற்றிய பொருள்முதல்வாத நோக்கிலேயே மார்க்ஸிஸ—லெனினிஸ சித்தாந்தம் அடித்தளமிட்டுள்ளது. உலகு பொருள் மயமானதென்றும், அப்பொருட்கள் மாற்றஞ்செய்யப்பட்டு மக்களினுல் அவர்களின் விருப்புகளுக்கேற்ப உபயோகிக்கப்படலாமென்று அது விஞ்ஞானபூர்வமாக நிறுவியுள்ளது. இதுவரை கண்டுபிடிக்கப்படாத இயற்கையின் தோற்றப்பாடுகளையும், அதன் இரகசியங்களையும் அறிந்துகொள்ள இவ்வாருன தத்துவம் மக்களைத் தூண்டுகிறது. இயக்கவியல் பொருள் முதல்வாதத்தின் பிரதான விதிகளை மனித சமுதாயத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக சமுதாய அபிவிருத்தியின் பிரதான வழிகளை விபரிக்கும் வரலாற்றியற் பொருள்முதல் வாதத்தை மார்க்ஸ்—ஏங்கல்ஸ் ஆகியோர் உருவாக்கினுர்கள்.

பண்டங்களின் உற்பத்தி, விநியோகம், பரிமாற்றம், நுகர்ச்சி ஆகியவற்றில் மக்களிடையே உருப்பெற்றுவரும் சமுதாய உறவுகளின் அபிவிருத்தியின் தவிர்க்முடியாத விளைவுகளாக வர்க்கப் போராட்ட சித்தாத்தத்தின் உருவாக்கம் இருப்பது மார்க்ஸிஸத்தின் மாபெரும் சிறப்பாகும். இந்தத் தத்துவம் தோற்றத்தின் விதிகளையும் சமூக—பொரு

ளாதார மாற்றுப் போக்கினையும், அதன் அபிவிருத்தியினையும் ஆராயும் மார்க்ஸினுடைய பாட்டாளிவர்க்க அரசியல் பொருளாதாரத்தினை தனது சித்தாந்த அடித்தளமாகக் கொண்டுள்ளது.2 வரலாற்று அபிவிருத்தியின் அனைத்துப் போக்குகளும் முதலாளித்துவத்தின் வீழ்ச்சிக்கும், உற்பத்திக் காரணிகளின் சமுதாயச் சொத்துடைமையின் மீது தளம் கொண்ட கம்யூனிஸ உற்பத்திமுறையின் தோற்றத்திற்கும் அதன் வெற்றிக்கும் உகந்த சூழ்நிலைகளை உருவாக்குகின்றன. ஏகாதிபத்திய சகாப்பத்திலும், பாட்டாளி வர்க்க புரட்சிகளின் சகாப்தத்திலும் லெனின் இந்தக் சித்தாந்தத்தினை ஆக்கபூர்வமாக உருவாக்கினார், அத்துடன் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதற்கான காலகட்டத்தில் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பிரச்னைகளையும் அவர் ஆராய்ந்தார். மார்க்ஸிஸ—லெனினிஸ அரசியற் பொருளாதாரத்தின் அபிவிருத்தி சோவியத் ஒன்றியத்திலும், ஏனைய நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளிலும், மார்க்ஸியவாதிகளினாலும் மேலுயர்த்தப்பட்டது.

இறுதியாக, மார்க்ஸிஸ—லெனினிஸத்தின் மூன்றாவது அம்சம் விஞ்ஞான சோஷலிஸமாகும், இந்த விஞ்ஞானம் பாட்டாளிவர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தினை தெளிவாக விபரிக்கிறது. இது சமுதாயத்தின் சோஷலிஸ மாற்றப் போக்கின் வழிகளையும், வடிவங்களையும், வழிமுறைகளையும் ஆராய்கிறது. முதலாளித்துவ சமுதாயம் சோஷலிஸ சமுதாயமாக மாறும் புரட்சிகர மாற்றப்போக்கின் வரலாற்றுரீதியான தவிர்கமுடியாத தன்மையை விஞ்ஞான சோஷலிஸம் நிறுவுவதுடன் புரட்சிகரப் போராட்டத்தில் உழைக்கும் வர்க்கத்தினதும் அதனால் வழிகாட்டப்படும் வெகுஜனங்களினதும் இடத்தினையும், பாத்திரத்தையும் காட்டுகிறது, அத்துடன் உலக புரட்சிகர வழிமுறையில் தேசிய விடுதலை இயக்கங்களினதும், ஏனைய ஜனநாயக இயக்கங்களினதும் சாராம்சங்களையும், பாத்திரத்தினையும் விபரிக்கிறது. சமுதாயத்தின் காத்திரமான முற்போக்கான மாற்றங்களின்போது ஒவ்வொரு நாட்டினதும் தேசிய ரீதியான, வரலாற்றரீதியான தனித்துவ அம்சங்கள் கணக்கிலெடுக்கப்படவேண்டுமென்று விஞ்ஞான சோஸலிஸம் வலியுறுத்துகிறது.

---

2 சமுதாய அபிவிருத்தியில் சமூக—பொருளாதார உருவாக்கம் ஒரு கட்டமாகும். மார்க்ஸிஸ—லெனினிஸ விஞ்ஞானம் இவ்வாறான ஐந்து உருவாக்கங்களைக் குறிப்பிடுகிறது: பண்டைய கம்யூன்கள், அடிமைத்தனம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், கம்யூனிஸம். கம்யூனிஸத்தின் முதலாவதுபடி சோஷலிஸமாகும்.

முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து மனிதகுலம் விடுதலையடைவது தவிர்க்கமுடியாததென்று மார்க்ஸிஸ-லெனினிஸத்தின் ஸ்தாபகர்கள் தமது ஆய்வுகளின்மூலம் நிரூபித்துள்ளார்கள். இது தானுக நடைபெறக் கூடியதல்ல என்றும் ஏகபோக பூர்ஷுவாக்களை புரட்சிகரமாகத் தூக்கி வீசுவதன் மூலமாகவே இதனை அடையலாமென்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அடக்குமுறையின் பழமை வாய்ந்த வழிமுறையை அழிக்கவல்ல, சமத்துவமான, தார்மீக சமுதாயமொன்றினை நிர்மாணிக்கவல்ல ஒரேயொரு சமுதாய சக்தி உழைக்கும் வர்க்கமேயாகும்.

## உழைக்கும் வர்க்கத்தின் வரலாற்றுப் பணி

சகல உழைக்கும் மக்களினதும் புரட்சிகரப் போராட்டத்தில், முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, உறுதியான போராளியாக நின்று அவர்களுக்குத் தலைமைதாங்கிச் செல்வதே உழைக்கும் வர்க்கத்தின் வரலாற்றுப் பணியாகும். அவர்களுடன் ஒன்றுபட்டு நிற்கும் உழைக்கும் வர்க்கம் சோஷலிஸ புரட்சியினை வெற்றிகரமாக நடாத்தி தனது அரசியல் அதிகாரத்தினை நிலைநிறுத்துகிறது, அதன் பின்னர் சோஷலிஸ நிர்மாணத்திற்கான காலப்பகுதியில் சமுதாயத்தினை வழி நடாத்திச் செல்கிறது.

இப்பாரிய வரலாற்றுப் பணி ஏனைய குழுக்களிடம் ஒப்படைக்கப்படாமல் உழைக்கும் வர்க்கத்திடம் மட்டும் ஒப்படைக்கப்பட்டது ஏன்? பல காரணங்கள் இதனை நன்கு விளக்குகின்றன. அவற்றுள் மிக முக்கியமானவற்றை இங்கு நோக்குவோம்.

உழைக்கும் வர்க்கம் மிக முன்னேற்றமான, இயந்திரமயமான உற்பத்தித்துறையுடன் தொடர்புபட்டிருந்தது. இன்றோ அதன் உயர்வடிவமான—தன்னியக்கமயமாக்கப்பட்ட, கம்பியூட்டர் மயமாக்கப்பட்ட உற்பத்தித்துறையுடன் தொடர்புபட்டுள்ளது. இது தொடர்ந்து வளர்ச்சியடைந்து சென்று வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலுள்ள குடிமக்களில் பெரும்பான்மையானோரையும் உள்ளடக்கிய மிக்க பலம்வாய்ந்த வர்க்கமாக மாறும்; வளர்முக நாடுகளிலும் உழைக்கும் வர்க்கத்தின் எண்ணிக்கை துரிதமாக வளர்ச்சியடைந்து செல்கிறது. கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் உலகிலுள்ள மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பத்துமில்லியனுக இருந்தால் இப்போது இது ஏறக்குறைய 650 மில்லியனுக இருக்கும்;

முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களைச் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லை அத்துடன் அரசியல் அதிகாரமும் அதற்கு மறுக்கப்பட்டிருந்தது. தொழிலாளர்களால் உருவாக்கப்படும் பொருள் முதற் பெறுமானங்கள்—பாதணிகள் அல்லது உடைகள், இயந்திரக் கருவிகள் அல்லது மோட்டார் வண்டிகள், கப்பல்கள் அல்லது விமானங்கள்—அவற்றை உற்பத்தி செய்பவர்களுக்கே சொந்தமாக இருக்கவேண்டுமென்ற முதனிலையிலிருந்தே மாக்ஸிஸ—லெனினிஸ சித்தாந்தம் பிறக்கிறது.

சுரண்டுவோர்களின் அதிகாரத்தைத் தூக்கிவீசுவது சிக்கலான செயற்பாடாகவே இருந்தது, ஆனால் தொழிலாள வர்க்கத்தின் மிகப் பிரதான செயற்பாடு அதுவல்ல. சுரண்டப்பட்ட மக்கள் யாவரையும் ஒன்றுதிரட்டி முழுமையான சமுதாய மற்றத்தின் பாதையில், புதியதோர் சோஷலிஸ, பொருளாதார, கலாச்சார உருவாக்கத்தின் பாதையில் வழிநடாத்திச் செல்வது மேலும் சிக்கலானதாக இருந்தது, சோஷலிஸத்தையும், வர்க்கமற்ற சமுதாயமொன்றினையும் உருவாக்குவதே மக்களின் மகிழ்ச்சிக்காகப் போராடும் தொழிலாளி வர்க்கத்தினரால் ஆற்றப்படவேண்டிய மிகச்சிக்கலான, மிகப்புனிதமான பணியாகும்.

''சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி' ன்ற நூலிலிருந்து'

புள்ளிவிபரங்கள்

# சோ.க.க. இன்று

★ 1980ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு கோடி 70லட்சம் அங்கத்தவர்கள்—அல்லது தேசத்தின் (18 வயதிற்கு மேல்) வயதுவந்தோரில் 9.3 சதவீதம்— இருந்தனர். கடந்த 20 ஆண்டுகளில் சோ. க. க.வின் அங்கத்துவ பலம் சுமார் இரட்டிப்பாகியிருக்கிறது.

★ சோ. க. க. ஒரு தொழிலாளர் வர்க்க கட்சியாகும், கட்சியிற் சேர்ந்தோரில் 59 சதவீதத்தினர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள். தொழிற் கேந்திரங்களில் புதிதாகச் சேர்ந்தோரிடையே தொழிலாளர் விகிதம் மேலும் அதிகமாகும்—சுமார் 65—70 சதவீதம்.

★ சோ. க. க. அங்கத்தவர்களில் 50 சதவீதத்திற்குமதிகமானோர் தொழிற்சாலை தொழிலாளர்களும், கூட்டுப்பண்ணை விவசாயிகளுமாவர், தொழிற்துறை மற்றும் நிர்மாணத்தில் 39 சதவீதம், போக்குவரத்து மற்றும் தொடர்புகளில் 8சதவீதம், விவசாயத்தில் 20 சதவீதம் உட்பட மொத்த கம்யூனிஸ்டுகளில் சுமார் 75 சதவீதத்தினர் பொருளுற்பத்திகளில் ஈடுபட்டுள்ளனர். கம்யூனிஸ்டுகளில் 16 சதவீதத்தினர் விஞ்ஞான, மருத்துவ, கல்வி, கலாசாரத் துறைகளிற் பணியாற்றுகின்றனர். 8 சதவீதத்தினர் நிர்வாக ஆளணியினராயிருக்கின்றனர்.

★ சித்தாந்தம், கொள்கை என்ற ரீதியில் மட்டுமல்லாமல் உறுப்பாக்கத்திலும் சோ. க. க. என்பது சர்வதேசியவாதிகளைக் கொண்டதோர் கட்சியே. இதில் சோ. சோ. கு. ஒ. விலுள்ள 100க்கும் மேற்பட்ட தேசிய இனங்கள் இனக்குழுக்களின் பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர்.

★ 1927ல் உயர்தர அல்லது நடுத்தரக் கல்வி பெற்றோர் கம்யூனிஸ்டுகளில் 10சதவீதமே. 1947ல் இது 57 வீதமாயும் 1977ல் 86 சதவீதமாகவும் அதிகரித்தது. இன்று ஒவ்வொரு நாலாவது என்ஜினியர், தொழில் நுட்பவியலாளர் விவசாயவியலாளரும், ஒவ்வொரு மூன்றாவது ஆசிரியரும். ஒவ்வொரு 6வது டாக்டரும் கம்யூனிஸ்டுகளாயிருக்கின்றனர்.

★ 18 லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்களும் கூட்டுப்பண்ணை விவசாயிகளும் முன்னணி கட்சி உறுப்புகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். சோவியத்துகளுக்

கான மக்கள் பிரதிநிதிகளில் சுமார் 43.2 சதவீதம் கம்யூனிஸ்டுகள் இது சுமார் 10 லட்சம் பேராகும். ஒருகோடி கம்யூனிஸ்டுகள் கட்சி, அரசாங்க, தொழிற்சங்க மற்றும் இளங் கம்யூனிஸ்ட் கழக முன்னணி உறுப்புகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர் இது மொத்த அங்கத்தினர்களில் 37 சதவீதமாகும்.

★ கம்யூனிஸ்டுகளில் நான்கில் ஒரு பகுதியினர் பெண்கள். யூனியன் குடியரசுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதேச, பிராந்திய, மத்திய கமிட்டிகளது அங்கத்தவர்கள் வேட்பாள அங்கத்தவர்களில் 23 சதவீதம் பெண்களாவர். மாவட்ட நகர கட்சி கமிட்டிகளிலும் அங்கத்தவர்கள் வேட்பாள அங்கத்தவர்களில் 29 வீதம் பெண்களாவர். பிரதான கட்சி ஸ்தாபனங்களின் எல்லாச் செயலாளர்களிலும் மூன்றில் ஒருவர் பெண்ணுகவுள்ளார்.

★ சோ. க. க.வை நிரப்புவோரில் குறிப்பிடத்தக்க பகுதியினர் இளம் கம்யூனிஸ்ட் கழகத்தவராவர். இன்று கட்சியில், சேர்வோரில் 74 சதவீதத்தினர் இளம் கம்யூனிஸ்ட் கழகத்தினரே. சோவியத் கம்யூனிஸ்டுகளில் அரைப்பகுதியினர்க்குமதிகமானேர் 40 வயதிற்குட்பட்டவர்களாவர்.

★ தேசத்தில் பிரதான கட்சி ஸ்தாபனங்கள் 403,000 இருக்கின்றன. 1976-1979 காலகட்டத்தில் இத்தொகை 13,000 பேரால் அதிகரித்தது.

★ சோ. சோ. கு. ஒ.வில் கட்சி உறுப்பினர்கள் சமூக விஞ்ஞான அகடமி, குடியரசு மற்றும் அனைத்து பிராந்திய கட்சிப் பள்ளிகள் வகுப்புகள் என்பவற்ருல் பயிற்சியளிக்கப்படுகிறுர்கள், அத்துடன் முன்னணி கட்சி மற்றும் அரசாங்க தொழிலாளர்களுக்கான பயிற்சிக் கல்லூரிகள் சமூக விஞ்ஞான அகடமியின் கீழும் அத்துடன் 100க்கு மேற்பட்ட நிரந்தர பாடத்திட்டங்களாலும் அமைந்துள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 240,000 பேர் இந்த ஸ்தாபனங்களில் பட்டம் பெற்றுள்ளனர்.

(ஏ. பி. என்.)

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

076027

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# சோஷலிஸம்
# தத்துவமும் நடைமுறையும்

இம் மாத சஞ்சிகையைப்
பெற பின்வரும் முகவரிக்கு
எழுதுங்கள்:

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

பிரகதி-அச்சகம் 93, மாளிகாகந்தை ரோட், கொழும்பு-10.